விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 15 திங்கட்கிழமை (27.02.2006) தொலைபேசி 222 3378 ஒலி 70

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம்

## ஊடகவியலாளர் மாநாட்டில் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக புதிய உடன்பாடுகளையே அரசும் விடுதலைப்புலிகளும் ஏற்றுள்ளனர். இந்நடவடிக்கையானது ஒரு வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் திருத்தம் செய்தமைக்கு ஏற்ற செயல் என அமைச்சரும் அரச பேச்சுக்குழுவின் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் இடம் பெற்ற பேச்சுக்கள் குறித்து நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஜெனீவாப் பேச்சில் கலந்து கொண்ட அரச பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினர். அதன்போது பேச்சுக்குழுத்தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு ஜனாதிபதி கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.

## இலங்கையில் ஆயுதக்குழுக்கள் இல்லை ஆனால் ஆயுதம் களைவதாக அரசு உறுதி

### ஜாதிக ஹெல உறுமய அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் துணைப்படைகள் எவையும் இல்லை எனினும் யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பட அனைத்து ஆயுதக்குழுக்களினதும் ஆயுதங்களைக் களைவதாக அரச பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளிடம் உறுதியளித்துள்ளனர்.

ஆனால் அவர்கள் யாரிடம் இருந்து ஆயுதங்களைக் களையப்போகிறார்கள் என ஜாதிக ஹெல உறுமய கேள்வியெழுப்பியுள்ளது. ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்களுக்கு தமது கட்சி எவ்வித அனுமதியையும் வழங்கவில்லையென அக்கட்சி ... டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையில் உள்ள சில விடயங்கள் ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் செய்து கொண்ட உடன்படிக்கைக்கும், மகிந்த சிந்தனைக்கும் மாறுபட்டதாகும் என கட்சியின் செயலாளர் நாயகம் ஓமல்பே சோபித தேரர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தை சமநிலைப்படுத்துவதற்குப் பதிலாக அதனை மதித்து செயற்படுவதற்கு அரசாங்கப் பிரதிநிதிகள் இணங்கியதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிக...

## ஜெனீவாப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப்புலிகளின் அழுத்தங்களுக்கு அரச பிரதிநிதிகள் அடிபணிந்துவிட்டனர்

### ஜே.வி.பி.கடும் கண்டனம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்களின் முடிவில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்பதாக அரசாங்கக்குழு தெரிவித்தமைக்கு ஜே.வி.பி.கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

நோர்வேத் தரப்பினரதும் விடுதலைப்புலிகளினதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்தே கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த அறிக்கையானது தமது கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு முரணாக தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதியுடன் தமது கட்சி ஏற்படுத்திக்கொண்ட 12 விடயங்களை உள்ளடக்கிய உடன் படிக்கையின் அடிப்படையிலேயே ...

## ஜாதிக ஹெல உறுமய அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் துணைப்படைகள் எவையும் இல்லை எனினும் யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பட அனைத்து ஆயுதக்குழுக்களினதும் ஆயுதங்களைக் களைவதாக அரச பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளிடம் உறுதியளித்துள்ளனர்.

ஆனால் அவர்கள் யாரிடம் இருந்து ஆயுதங்களைக் களையப்போகிறார்கள் என ஜாதிக ஹெல உறுமய கேள்வியெழுப்பியுள்ளது. ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள ஒருங்கிண்ணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்களுக்கு தமது கட்சி எவ்வித அனுமதியையும் வழங்கவில்லையென அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையில் உள்ள சில விடயங்கள் ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் செய்து கொண்ட உடன்படிக்கைக்கும், மகிந்த சிந்தனைக்கும் மாறுபட்டதாகும் என கட்சியின் செயலாளர் நாயகம் ஓமல்பே சோபித தேரர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தை சமநிலைப்படுத்துவதற்குப் பதிலாக அதனை மதித்து செயற்படுவதற்கு அரசாங்கப் பிரதிநிதிகள் இணங்கியதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிகளாக மாற்றுவதென் (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் அழுத்தங்களுக்கு அரச பிரதிநிதிகள் அடிபணிந்துவிட்டனர்

## ஜே.வி.பி.கடும் கண்டனம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்களின் முடிவில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்பதாக அரசாங்கக்குழு தெரிவித்தமைக்கு ஜே.வி.பி.கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

நோர்வேத் தரப்பினரதும் விடுதலைப்புலிகளினதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்தே கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கையானது தமது கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு முரணாக தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதியுடன் தமது கட்சி ஏற்படுத்திக்கொண்ட 12 விடயங்களை உள்ளடக்கிய உடன் படிக்கையின் அடிப்படையிலேயே அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களை ஒப்படைக்க கருணா குழு தயாரில்லையாம்!

## ரொய்ட்டர் செய்தி தெரிவிப்பு


(கொழும்பு)

எமது ஆயுதக்களைவுகளை மேற்கொள்வதற்கு ஏதேனும் முயற்சிகள் எடுக்கப்பட்டால் அதற்கு உடன்படப்போவதில்லை என கருணா குழு தெரிவித் துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயுதங்களைக் கைவிடுவதற்கு தமது குழு தயார் இல்லை எனவும் தம்மைத் தாக் கினால் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தினை முடிவுக்குக்கொண்டு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகப்போராடப்போவதாகவும் ரொய்ட்டருக்கு அளித்துள்ள மின்னஞ்சல் பேட்டியில் கருணா தெரிவித்துள்ளார்.

தங்களுக்கென ஆயுதங்களை வைத்தி ருப்பதற்கு உரிமை இருக்கின்றது என்பதை விடுதலைப்புலிகளுக்கு தெட்டத்தெளிவாகத் தெரிவிக்கின்றோம். தற்பாதுகாப்புக்காக எங்களிடம் உள்ள ஆயுதங்களைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# உடன்படிக்கையில் திருத்தமா?



## தமிழ்ச்செல்வன் மறுப்பு

(லண்டன்)

ஜெனீவாப் பேச்சுக்களின் முடிபுகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்திருத்தமே என அரசாங்கக்குழுத்தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளமையை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மறுத்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)




# தமிழ்க் கலைகளில் அதிக ஆர்வம் கொண்ட முத்தமிழ்க் கலாநிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்தின் கலைஞர்களில் மிக உயர்வான இடத்தில்-மதிப்புப் பெற்றவர் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்கள். தமிழ்க்கலை



களில் ஆர்வமும் ஆழமான பட்டறிவும் கொண்டு விளங்கியவர் அவர். கர்நாடக சங்கீதம், பரதம் ஆகியவற்றில் சிறந்த புலமை கொண்ட அவர் இத்துறைகள் சார்ந்து பல்வேறு ஆக்கங்களை இம்மண்ணுக்குத் தந்துள்ளார். அவை ஒவ்வொன்றும் மிக உயர்வான படைப்பிலக்கியங்களாகப் பாராட்டுதலைப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாண மண்ணின் கலையாக்கப் பெருமையை உலகளாவிய ரீதியில் பறைசாற்றிய பெருமை வீரமணி ஐயா அவர்களையே சாரும். தமிழ்மொழியிலான இயல்-இசை-நாட்டிய நாடக எழுத்தாக்க கர்த்தாக்களில் தமிழகமே ஏற்று மதித்த பெரும் ஆக்கக் கலைஞனாக அவர் மிளிர்ந்தார்.

தேசப்பற்று, தமிழுணர்வு ஆகியவற்றின் மூலம் ஆழகியற் கல்வியை படைத்த மாமேதையாகப் போற்றப்படும் அவரின் ஆக்கங்கள் உயர் கல்விப் புலமை சார்ந்தவையாக பொதுமக்களும் உணர்ந்து இரசிக்கும் உயிர்ப்பானவையாக மிளிர்கின்றன.

எமது பிரதேச பாடசாலைகளிலும், ஆசிரிய கலாசாலையிலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் தன் அழகியல் சார்ந்த முத்திரையைப் பதித்த அப்பெருமகனின் சேவையை நன்றியுணர்வோடு போற்றி மதிக்கும் மனப்பாங்கு உயரவேண்டும்.

இதற்கமையவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி தனது ஆறாவது ஆண்டு நிறைவு நிகழ்வின் முதலாவது செயலாற்றுகையாக அமரர் முத்தமிழ்க் கலாநிதி இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ மா.த. ந.வீரமணி ஐயா அவர்களின் நினைவுப் போருரையை இன்று நிகழ்த்துகின்றது.

ஒவ்வொரு வருடமும் அவரது நினைவுப் பேருரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழர் தம் பாரம்பரியங்களை, கலை கலாசார விழுமியங்களை, எம் மண்ணின் அடையாளங்களாகக் காட்டிய, அழியாத ஆக்கங்களைப் படைத்த மகா வித்துவான் வீரமணி ஐயா அவர்களின் பெருமையை, சேவையை எம்மண் மறந்துவிடக்கூடாது. அவருடைய ஆக்கங்கள் அச்சேற்றப்பட வேண்டும்.

எமது பண்பாட்டின் கலைத்துறை அடையாளங்களை ஆவணப்படுத்திய அப்பெருமகனார் தொடர்பான ஆய்வுகளும் ஆக்கங்களும் புதிதாக வரவேண்டியுள்ளது. அதற்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பல வழிகளில் முயன்று வருகின்றது. அவ்வகையில் மகா வித்துவான் மா.த.ந.வீரமணி ஐயா அவர்களுடைய இன்றைய நினைவுப் பேருரை நிகழ்வில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

மகா வித்துவான் மா.த.ந.வீரமணி ஐயா அவர்கள் மிகச் சிறந்த நல்லாசிரியராக இருந்து 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற முதுவாக்கியத்தை உயிர்ப்பித்தவர். சிறந்த மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கியவர். 'ஆசிரியர் விளைதிறன் விருத்தியில் கல்வித் தொழில்நுட்பம்' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர் சுப்பிரமணியம் பரமானந்தன் நிகழ்த்தவுள்ளார். இவ்வகையில் அமரர் வீரமணி ஐயா அவர்களின் சேவையை நன்றியுணர்வோடு போற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடு கல்வியின் ஆற்றுப்படுத்தல் பெறுமானமாக அமைகின்றது.

**வித்தியாதாசன்**

# அரசு இழப்பீடுகளை வழங்க வேண்டும்!

## கோழிப்பண்ணை உரிமையாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சல் பீதியினால் பாதிக்கப்பட்ட கோழிப் பண்ணை உரிமையாளர்கள், தமக்கு உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

நாட்டின் பல பாகங்களிலும் தற்போது ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பீதியினால் கோழி இறைச்சி மற்றும் கோழி முட்டை விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பண்ணைகளில் உள்ள கோழிகள், கோழி முட்டைகளைச் சந்தைப்படுத்த முடியாததாலேயே பண்ணை உரிமையாளர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் பறவைக்காய்ச்சல் பரவியிருப்பதாக இதுவரை உறுதிப்படுத்தப்படாத நிலையில், வீண் அச்சத்தைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பண்ணையாளர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (க-7)

# நூலகப் பொறுப்பாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது நிலவும் நூலகப் பொறுப்பாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் நூலகப் பொறுப்பாளர் தரம் 2 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் 6 மாவட்டங்களில் விரைவில் நடத்தப்படவுள்ளதாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்துள்ளதுடன், பல்கலைக்கழகமொன்றில் நூலகவியல் பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூலக சேவை தரம் 3 இல் 5 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து இலங்கை நூலகர் சேவை சங்கத்தின் மத்திய பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் கேட்டுள்ளார். (கு-9)

# இராசி பலன்

**27.02.2006**
**(மாசி 15, திங்கட் கிழமை)**
**சதுர்த்தசி முற்பகல் 9.23 மணிவரை**
**அவிட்டம் பிற்பகல் 4.33 மணிவரை**
**இராகுகாலம் 7.59-9.29 மணிவரை**
**சுபநேரம் 12.29-1.59 மணிவரை**
**அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி, செய்தொழில் விருத்தி, குடும்ப சுகம். |
| இடபம் | கடின உழைப்பு, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, போசனசுகம். |
| மிதுனம் | புதிய திட்டமிடல், இடமாற்றம், கட்டுப்பாடு, தந்தைவழி உதவி. |
| கடகம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், அபகீர்த்தி, உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, பெருமையடைதல், தொழில் சிந்தை. |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் நன்மை, வாக்குமேன்மை, போசனசுகம். |
| துலாம் | தொழில் சிந்தை, முயற்சி தாமதம், பணக்குறைவு, சிந்தனை மிகுதி. |
| விருச்சிகம் | மாதா சுகம், காரிய தாமதம், மனக்கிலேசம், பிரயாணம். |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாண நன்மை, தனவருவாய், போசனசுகம். |
| மகரம் | வீண் வார்த்தை, பணவிரயம், காரிய தாமதம், கௌரவக்குறைவு. |
| கும்பம் | கற்பனை மிகுதி, தொழில்சிந்தை, நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை. |
| மீனம் | பிரயாணம், சயனசுகக்குறைவு, சுப செலவு, காரிய தாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# இந்தியா-இலங்கை கடற்படையினர் மீண்டும் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடுவர்

(கொழும்பு)

இந்தியா மற்றும் இலங்கை கடற்படையினர் மீண்டும் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட உள்ளதாக இந்தியாவின் கிழக்குப் பிராந்திய கடற்படை தளபதி சுரேஸ் மேத்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழக ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் இருதரப்பு கடற்படையினரும் கடந்த வியாழக்கிழமை இது தொடர்பில் விவாதித்தனர் என்றும் இருதரப்பு கூட்டுப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் விரைவில் இந்த கூட்டுப்பயிற்சி நடைபெறும் என்றும் சுரேஸ் மேத்தா தெரிவித்துள்ளார்.

முன்னதாக சென்னையில் நடைபெற்ற இந்து சமுத்திர நட்பு நாடுகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கில் சுரேஸ் மேத்தாவிடம் இந்து சமுத்திர பிராந்தியத்தில் பகைமை சக்திகளின் நடவடிக்கைகள் ஏதேனும் உள்ளதா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சுரேஸ் மேத்தா அத்தகைய முக்கியத்துவமான சம்பவங்கள் ஏதும் எமது கடற்படையினரின் கவனத்துக்கு வரவில்லை. அதாவது நாங்கள் அத்தகைய நிலைமைகள் ஏற்படாதவாறு எமது பணியைச் செய்து வருகிறோம் என்றார்.

இக்கருத்தரங்கில் பேசிய சுரேஸ்மேத்தா இந்தியக் கடற்படையிடம் 135போர்க் கப்பல்கள் இருப்பதாகவும் பல அண்டை நாடுகளுடன் கூட்டுப் பயிற்சியில் இந்தக் கப்பல்கள் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.

சென்னை பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு மற்றும் யுத்திகள் தொடர்பான பிரிவும் இந்து சமுத்திரம் தொடர்பிலான படிப்பினைகளுக்கான நிறுவனமும் இணைந்து இந்த கருத்தரங்கை நடத்தின.

இக் கருத்தரங்குக்கு ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி வைஸ் அட்மிரல் மிகிர் ராய் தலைமை வகித்தார். இலங்கை கடற்படையுடன் இணைந்து இந்திய கடற்படையினர் கடந்த 6 மாதுங்களுக்கு முன்னதாக கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

# 6 சதவீதமான பிறப்புக்கள் பதிவு செய்யப்படுவதில்லை

(கொழும்பு)

6 சதவீதமான பிறப்புக்கள் இலங்கையில் உத்தியோகபூர்வமாக பதிவுசெய்யப்படுவதில்லையென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள சமூகத்தவர்களில் அனர்த்தம் காரணமாக உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள், வீதியோரங்களில் வசிப்பவர்கள் அகதிகளாகி மீண்டும் தமது பிரதேசங்களுக்கு திரும்பியவர்கள் மற்றும் நாடோடிகளாக வாழ்க்கை நடத்துபவர்களே பெருமளவில் பிறக்கும் குழந்தைகளை பதிவுசெய்வதில்லை என்று பிளான் சிறிலங்கா எனும் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (க-9)

# சுகாதார அமைச்சின் அறிவிப்பினால் ஏமாற்றமடைந்துள்ள விண்ணப்பதாரிகள்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் கலைப்பிரிவில் சித்தியடைந்தோருக்கு தாதியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தபோதும், தற்போது உயர்தரப் பரீட்சையின் விஞ்ஞான பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டுமென்று அறிவித்துள்ளமை தம்மை பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக கலைத்துறையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியான ஆயிரத்து 434ஆம் இலக்க அரசாங்க வர்த்த மானியில் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

உயர்தரப் பரீட்சையில் மூன்று விஞ்ஞானப்பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க முடியுமென்று சுகாதார அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த காலங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காததன் காரணமாக உயர்தரப் பரீட்சையின் கலைப்பிரிவில் சித்தியடைந்தவர்களுக்கும் நியமனங்களை வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா முன்னர் தெரிவித்திருந்தார்.


சுமார் 15ஆயிரம் பேர் தாதியர் பதவிக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பை அடுத்து கலைப்பிரிவில் சித்தியடைந்த மாணவர்களும் தாதியர் பதவிக்கு விண்ணப்பிக்க ஆவலுடன் காத்திருந்தனர்.

எனினும் புதிய அறிவித்தலில் உயர்தர விஞ்ஞான பாடத்தகைமை கோரப்பட்டுள்ளமை தம்மை ஏமாற்றத்திற்குள்ளாக்கியுள்ளதாக கலைப்பிரிவு விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர். (கு-9)

# ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வது குறித்து பேசுவதானால் வெளிநடப்பு செய்வோம்

## ஜெனீவாவில் எச்சரிக்கை விடுத்தார் பாலா



(லண்டன்)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்தம் செய்வது குறித்து இலங்கை அரசாங்கக் குழு பேச முயற்சித்தால் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து வெளிநடப்பு செய்வோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக் குழு தலைவர் அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை விடுத்ததாக சர்வதேச செய்தி நிறுவனமான ஏ.எவ்.பி தெரிவித்துள்ளது.

ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை அன்ரன் பாலசிங்கம் அளித்த நேர்காணலின் போது இதனைக் குறிப்பட்டிருந்ததாகவும் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் குறித்த செய்தி நிறுவனத்துக்கு அளித்த நேர்காணலில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கேள்வி எழுப்புமானால் நாங்கள் வெளிநடப்பு செய்வோம் 'எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்பியதை இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் தொடர்பாகவே நாங்கள் பேசுவோம்' என்று நோர்வே அனுசரணையாளர்களிடம் நாம் தெரிவித்திருந்தோம்.

முதல் நாள் பேச்சுக்களின் போது இலங்கை அரசாங்கத் தரப்பில் யுத்த நிறுத்த ஒப்பந்த திருத்தம் குறித்து பேசினார்கள். ஆனால் நாங்களோ இந்த ஒப்பந்தம் என்பது இரு தரப்பினருக்கு இடையேயானது மட்டும் அல்ல. 5 நோர்டிக் நாடுகள் மற்றும் சர்வதேச நாடுகள் தொடர்புடையது என்று தெரிவித்தோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்தான துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்களைக் களைய இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

இது ஒரு நல்ல அறிகுறி யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகவே தற்போதைய பேச்சுக்கள் அமைந்தன.

எதிர்வரும் பேச்சுக்களில் அரசியல் விடயங்களும் பேசப்படும் என்றார்.

இதேவேளை பி.பிசிக்கு அளித்த பேட்டியில்,

அமெரிக்க அரசின் அச்சுறுத்தலாலேயோ அல்லது அவர்களினுடைய அறிவுத்தலாலேயோ பேச்சுவார்த்தைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் செல்லவில்லை என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பி.பி.சிக்கு பேட்டியளிக்கையில் கூறினார்.

சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளை அங்கீகரித்தது. அவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்று பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு கூறிய கருத்தை ஏற்றுக்கொண்ட அதே வேளை, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் மிரட்டல்களுக்குப் பயந்து நாம் பேச்சுவார்த்தைக்கு செல்லவில்லை என்பதை நான் இங்கு தெளிவாகக் கூற விரும்புகின்றேன்.

இந்தியாவின் ஆதரவை விடுதலைப்புலிகள் விரும்புகிறார்கள். ஆனால் அந்தப் பங்களிப்பு தமிழ் மக்களுக்கு நீதியையும், நியாயத்தையும் வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை முஸ்லிம் மக்களுடைய அபிலாஷகளுக்காக போராடுவதற்கும் தயாராகவுள்ளது.

அத்துடன் முஸ்லீம் மக்களினுடைய பிரச்சினை பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் போது நிச்சயமாக தனித்துவமாக முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவை வரவழைத்து எம்முடன் இணைத்து பேச்சுவார்த்தை நடாத்துவோம் என்றும் அந்தப் பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (க-9)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் இன்று காலை 108 சங்காபிஷேகமும் விஷேட தீபாரதனையும் இடம்பெறும். பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இன்று மாலை 6.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று சுவாமி பூந்தண்டிகையில் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். (க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9மணிக்கு யாழ். ஆரிய குளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (க-7)

# ஸ்ரீ.சு.க.வை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டார் சந்திரிகா!

## ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது சுதந்திரக் கட்சியின் தலைவர் பொறுப்பினூடாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் கட்சியில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருப்பதாக வர்த்தக நுகர்வோர் அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதான அமைப்பாளருமான ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சியின் பிரமுகர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களின் இணக்கப்பாடின்றி சில மாவட்டங்களுக்கும் தொகுதிகளுக்கும் அமைப்பாளர்களை நியமிக்க சந்திரிகா நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்துள்ள பெர்ணான்டோபுள்ளே ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்புகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதனால் சிறீலங்கா சுதந்திரக்கட்சி கடும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கலாம் என்றும் எச்சரித்துள்ளார்.

கடந்த தேர்தலின் போது தங்கள் கட்சியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குப் பெரிதும் உதவிய அரசியல்கட்சிகளின் பொது இணக்கப்பாடு...

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களை அண்மையில் அழைத்த சந்திரிகா பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளினூடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் உயர் பதவிகள் சிலவற்றில் தனக்கு நெருக்கமானவர்களை நியமிக்க சந்திரிகா திட்டமிட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

## தரமுயர்த்துமாறு கோரிக்கை

(நல்லூர்)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை மகாவித்தியாலயமாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி குறித்த பாடசாலை அபிவிருத்திச்சங்கம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் விக்சி...

# கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அனைத்தையும் வெற்றிக்கு வழியாகப் பயன்படுத்த வேண்டும்

## திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

கிராமங்கள் தோறும் வசதிகள் அதிகரிக்கப்படும் போது அந்தப் பிரதேச மக்களும் பல்வேறு வசதிகளை அனுபவித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்குமென தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.எழிலன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு சம்பூர் மகா வித்தியாலயத்தில் கணனிப் பயிற்சி நெறியொன்றை அண்மையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வளங்கள் குறைந்த இடங்களிலும் நமது தலைவர் தூரநோக்க சிந்தனைக்கு ஏற்ப வளங்கள் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இங்கு ஒரு பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. போராட்டக் காலத்திலும் எமது பிரதேசத்தின் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டே வந்துள்ளது.

அமைதியான காலங்களில் இவை அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு அமைதி நிலவிய போதும் வசதிகள் அதகரிக்கப்படவில்லை.

வாய்ப்புக்களையும், வசதிகளையும் மற்றவர்கள் எமக்குத் தருவார்கள் என நாம் இருந்துவிட முடியாது. அவற்றினை தேடிப் பெற்றுக்கொள்ள முடியும்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை வெற்றிக்கு வழியாகப் பயன்டுத்த வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# கிளிநொச்சியில் ஜனசக்தி

## சமுர்த்தி முத்திரை கொடுப்பனவுகளை

நாங்கள் வெளிநடப்பு செய்வோம் ... கவே தற்போதைய பேச்சுக்கள் ... ஆனால் அந்தப் பங்களிப்பு தமிழ் மக்களுக்கு நீதியையும், நியா

# கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அனைத்தையும் வெற்றிக்கு வழியாகப் பயன்படுத்த வேண்டும்

## திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

கிராமங்கள் தோறும் வசதிகள் அதிகரிக்கப்படும் போது அந்தப் பிரதேச மக்களும் பல்வேறு வசதிகளை அனுபவித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்குமென தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.எழிலன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு சம்பூர் மகா வித்தியாலயத்தில் கணனிப் பயிற்சி நெறியொன்றை அண்மையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வளங்கள் குறைந்த இடங்களிலும் நமது தலைவர் தூரநோக்க சிந்தனைக்கு ஏற்ப வளங்கள் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இங்கு ஒரு பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. போராட்டக் காலத்திலும் எமது பிரதேசத்தின் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டே வந்துள்ளது.

அமைதியான காலங்களில் இவை அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு அமைதி நிலவிய போதும் வசதிகள் அதகரிக்கப்படவில்லை.

வாய்ப்புக்களையும், வசதிகளையும் மற்றவர்கள் எமக்குத் தருவார்கள் என நாம் இருந்துவிட முடியாது. அவற்றினை தேடிப் பெற்றுக்கொள்ள முடியும்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை வெற்றிக்கு வழியாகப் பயன்டுத்த வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# கிளிநொச்சியில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் திறப்பு

கிளிநொச்சியில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

முதன்மைச் சுடரினை தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் பாலகிருஸ்ணன் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றி வைத்தார்.

ஜனசக்தி காப்புறுதி பெயர்ப் பலகையினை கிளிநொச்சி மாவட்ட வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சந்திரா சப்பர் நாடாவெட்டித் திறந்து வைத்தார். (கு)



ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் படத்தில் காணலாம்.

## சமுர்த்தி முத்திரை கொடுப்பனவுகளை பெறுக!

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு சமுர்த்தி முத்திரை கிடைக்கப் பெற்று ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் உலர் உணவுப் பொருட்களையும் பெற்று மீதிப் பணம் பெறாத 600ரூபா, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகளை வைத்திருக்கும் குடும்பங்கள் உடனடியாக அந்த அந்தப் பிரிவில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொண்டு சமுர்த்தி வங்கியில் பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க-36)

## பரீட்சை

மூன்றாவது தொகுதியினருக்கான பரிசாரகர் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.தாதியார் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறும்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.மணிக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

வடிக்கைகளால் கட்சியில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருப்பதாக வர்த்தக நுகர்வோர் அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதான அமைப்பாளருமான ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சியின் பிரமுகர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களின் இணக்கப்பாடின்றி சில மாவட்டங்களுக்கும் தொகுதிகளுக்கும் அமைப்பாளர்களை நியமிக்க சந்திரிகா நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்துள்ள பெர்ணான்டோபுள்ளே ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்புகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதனால் சிறீலங்கா சுதந்திரக்கட்சி கடும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கலாம் என்றும் எச்சரித்துள்ளார்.

கடந்த தேர்தலின் போது தங்கள் கட்சியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குப் பெரிதும் உதவிய அரசியல்கட்சிகளின் பொது இணக்கப்பாடு மற்றும் நல்லெண்ணம் ஆகியவற்றை சிதைக்கும் வகையில் சந்திரிகாவின் செயற்பாடுகள் அமைகின்றன என்றும் அவர் ... பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளினூடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் உயர் பதவிகள் சிலவற்றில் தனக்கு நெருக்கமானவர்களை நியமிக்க சந்திரிகா திட்டமிட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தி)

## தரமுயர்த்துமாறு கோரிக்கை

(நல்லூர்)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை மகாவித்தியாலயமாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி குறித்த பாடசாலை அபிவிருத்திச்சங்கம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வித்தியாலயத்தை மகாவித்தியாயமாகத் தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்வதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரிடம் உறுதியளித்துள்ளார். (க-134)

# நுரைச்சோலை அனல் மின் திட்டத்தால் மக்களுக்குப் பாரிய உடல்நலக் குறைவு

## ஏற்படுமென எச்சரிக்கிறது கனேடிய மருத்துவர் சங்கம்

நுரைச்சோலை அனல் மின் திட்டத்தைச் செயற்படுத்தினால் மக்களுக்கு பாரிய உடல்நலக்குறைவு ஏற்படும் கனேடிய நாட்டு மருத்துவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் சுற்றச்சூழலியலாளர் அஜந்த பெரேரா கொழும்பு ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையில் கனடாவின் ஒன்டாரியோ மருத்துவ சங்கம் இத்தகைய எச்சரிக்கையை விடுத்திருப்பதாக்க கூறினார்.

நுரைச்சோலை மின் திட்டத்தால் மீன்பிடித் தொழில் பாரியளவில் பாதிக்கப்படும் என்றும் அஜந்த பெரேரா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கற்பிட்டி பகுதியில் அனைவருமே மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். நுரைச்சோலைத் திட்டம் செயற்படுத்தும் போது 2.2 பில்லியன் கலன்நீர் அனல் மின் திட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்டு கொதிநீராக கடலில் கொட்டப்படும். இது கடல்நீரின் சூழலை மாற்றியமைத்துவிடும். மீன்கள் மட்டுமல்ல பவளப் பாறைகளும் பாதிக்கப்படும். பிறப்புக் குறைபாடுகள், மூளை நோய்கள் உள்ளிட்டவைகளும் அனல் மின் திட்ட சாம்பல் கழிவினால் ஏற்படும் இந்தச் சாம் பலினால் ஆஸ்துமா மற்றும் நுரையீரல் தொடர்புடைய நோய்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றார். புதிய இடது முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண இது தொடர்பில் கூறுகையில், 3 ஆயிரம் பேருக்கு வேலை வாய்பளிக்கப்படும் என்று அரசாங்கம் கூறுவது வேடிக்கையாகவுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தினால் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படும் என்றார். (தி)

# இன்று ஒரு தகவல்

## குருவைத் தேடி

ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு குருநாதர் தேவை. நமக்கு நல்லவழி காட்டுவதற்கு ஒரு குருநாதர் கிடைப்பாரா என்று ஏங்கினார். பலநாள் தவித்தார். ஒருவரும் கிடைப்பதாகத் தெரியவில்லை. அவருடைய மனைவி ஒரு யோசனை சொன்னார். ‘‘இதே பாருங்கள்... நாம் இருவரும் இப்போது காட்டுக்குப் புறப்பட்டுப் போவோம் நடுக்காட்டில் ஒரு நடைபாதையோரமாக உட்கார்ந்து கொள்வோம். அந்த வழியாக நமக்கு முன்னால் வரும் முதல் மனிதன் யாரோ அவனையே குருவாக ஏற்றுக்கொள்வோம்” என்றார். இருவரும் சரி என்று ஒத்துக்கொண்டனர்.

உடனே அவர்களிருவரும் புறப்பட்டுக் காட்டுக்குப் போனார்கள். நடுக்காட்டில் ஒரு பாதையோரமாக உட்கார்ந்தார்கள். அப்போது திருடன் ஒருவன் தான் களவாடிய பொருட்களுடன் அந்த வழியாக வந்தான். இவர்கள் பார்த்துவிட்டார்கள். அவ்வளவுதான் உடனே ஓடிப்போய் காலில் விழுந்தார்கள். அவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். எங்களை வாழவைக்க வந்த வள்ளலே! நீங்கள்தான் எங்களுக்கு குருநாதராக இருந்து ஒரு நல்ல வழியைக் காட்டவேண்டும். எங்கள் மனதில் உள்ள பாவங்களைப் போக்க வேண்டும். ஒரு நல்ல மார்க்கத்தைக் காட்டவேண்டும் என்று வேண்ட ஆரம்பித்தார்கள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. “என்ன... இது பழி பாவத்திற்கு அஞ்சாமல் வழிப்பறி செய்வது எனது தொழில் இவர்களுக்கு நாம் எப்படி வழிகாட்டுவது?” என்று யோசித்தான். சரி... ‘‘உண்மையைச் சொன்னால்தான் இவர்கள் என்னை விடுவார்கள் போலிருக்கிறது” என்று நினைத்து “ஐயா... நான் ஒரு திருடன் . நீங்கள் நினைப்பது போலில்லை” என்றான். அதெல்லாம் இல்லை...நீங்கள்தான் எங்கள் குருநாதர் என்று உறுதியாக இருந்தார்கள் அவர்கள்.

திருடன் பார்த்தான். தப்பிப்பதற்கு என்ன வழி என்று யோசித்தான். “சரி... நீங்கள் இரண்டுபேரும் அப்படியே பத்மாசனம் போட்டு உட்காருங்கள்... கண்ணை மூடிக்கொள்ளுங்கள். நான் சொல்லும் வரைக்கும் நீங்கள் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும்'' என்றான். குருநாதரின் கட்டளையாக அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள். இவன் பார்த்தான் இது தான் சமயம் என்று மெதுவாக அங்கிருந்து நழுவி ஓடிப்போய்விட்டான். அதன்பின் அவன் காவலர்களிடம் மாட்டிக்கொண்டான். அவர்கள் இவனை சிறையில் போட்டுவிட்டனர்.

இவர்கள் இருவரும் இப்படியே உட்கார்ந்திருந்தனர். இவர்களுடைய மனஉறுதி கடவுளையே யோசிக்க வைத்ததாம். உடனே இறைவனும் இறைவியும் இவர்களின் முன்பு வந்து நின்று காட்சி கொடுத்தார்கள். “பக்தர்களே எழுந்திருங்கள்'' என்றனர். ஆனால் அவர்களோ! ‘‘பெருமானே! எங்களுடைய குருநாதரின் அனுமதி இல்லாமல் இந்த இடத்தை விட்டு நகரமாட்டோம்'' என்று கூறிவிட்டார்கள்.

இறைவனுக்கே மிகவும் சிக்கலாகிவிட்டது. இதனால் உடனே அந்த நாட்டு அரசனின் கனவில் இறைவன் தோன்றி ‘‘சிறையில் இருக்கும் திருடனை விடுதலை செய்'' என்று சொன்னார். திருடனுடைய கனவிலும் தோன்றி விபரத்தைச் சொன்னார். திருடன் விடுதலையானதும் நேராக அந்தக் காட்டுக்குப் போனான் .அவர்கள் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள் இன்னும் கண்ணை மூடிக்கொண்டே.

“உங்கள் குருநாதன் வந்திருக்கிறேன் கண்ணைத் திறவுங்கள்'' என்றான். அப்போதுதான் அவர்கள் கண்ணைத் திறந்தார்கள். இவன் நடந்தது முழுவதையும் சொன்னான். அப்போது ஆகாயத்திலிருந்து ஒரு குரல் கேட்டதாம் “உங்களுடைய தீவிர குருபக்தி போற்றுதற்குரியது. குருவிடம் பக்தி, பணிவு, நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எதையும் பெறுவார்கள் அப்படியே நீங்களும் அடைவீகள்” என்றது அந்தக் குரல்.தம்பதியருக்கு ஞானத்தெளிவு வந்ததாம். அந்தத் திருடனும் திருந்தி நல்லவனாகி விட்டானாம்.

‘நம்பிக்கை’ எப்படிப்பட்ட நல்ல விளைவுகளையெல்லாம் ஏற்படுத்துகிறது என்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

குருவைத்தேடி காட்டுக்குப்போன இன்னொருவனுடைய கதை உங்களுக்குத் தெரியுமா? இவன் இந்தக் காலத்து இளைஞன். நடுக்காட்டிற்குப் போய்விட்டான் யாரும் கிடைக்கவில்லை. அதுமட்டுமில்லை வழிகாட்டுவதற்கு ஒரு குருவைத் தேடிவந்தவன் இப்போது வந்த வழியையே மறந்துவிட்டான். திரும்பிப் போவதற்கு வழிதெரியவில்லை. எப்படியோ வீட்டுக்குப் போனால் போதும் என்று ஆகிவிட்டது, ஒன்றும் புரியவில்லை. பசி... தாகம்... பயம்... இரண்டு நாள் ஆகிவிட்டது. நல்லவேளையாக அந்த வழியாக ஒரு ஆள்வந் தான். இவன் ஓடிப்போய் அவனது கையைப் பிடித்துக்கொண்டு “ஐயா... நான் இந்த நடுக்காட்டில் வழி தவறி காணாமல் போய் இரண்டுநாள் ஆகிவிட்டது. நல்லவேளை... என்னுடைய அதிர்ஷ்டம் உங்களைச் சந்தித்துவிட்டேன்” என்றான் உற்சாகமாக. இதற்கு அவன் “மிகவும் சந்தோஷப்படாதீர்கள் ஏனென்றால் “நான் காணாமல் போய் நான்கு நாள் ஆகிவிட்டது'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மஹிந்தவின் நாடகத்தை இனவாதக் கட்சிகள் இன்னும் எவ்வளவு காலத்திற்கு அனுமதிக்கும்?

## விடுதலை வாசல் நிகழ்வில் கேணல் ஜெயம்

(கொழும்பு)

யுத்தம் வராமல் நம் நாடு நமக்குக் கிடைக்காது என்று சுவிஸில் நடைபெற்ற விடுதலை வாசல் நிகழ்வில் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தெரிவித்தார்.

எங்களுடைய விடுதலைப் போராட்டம் இன்று விடுதலையின் வாசலில் வந்து நிற்கின்றது என்பதை எல்லோருடைய நாவும் சொல்லிக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக அதை நாங்கள் கண்கூடாக கண்டுகொண்டிருக்கிறோம். இனி வரப்போகும் காலம் அதற்கான பதிலை நிச்சயமாகச் சொல்லும்.

எனவே இந்த மண்ணில் உங்களுடைய உறவுகளின் விடுதலைக்காக உணர்வுகளைக் காட்டி நிற்கும் உங்களுக்கு எங்கள் தமிழ் மக்களின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றோம்.

நாங்கள் சண்டை தொடர்பாகவே கதைத்துப் பழக்கப்பட்டவர்கள். சண்டைக்காக வாருங்கள் என்று மக்களை அழைத்து பழக்கப்பட்டவர்கள். உங்கள் முன் பேச அழைத்த போது எந்த விடயத்தைச் சொல்வது என்பது எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது.

போராளிகளுடன் கதைக்கின்ற போது போராளிகளிடம் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு ஏற்ற வகையில் கதைப்போம். அந்த வகையில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

எங்களுடைய விடுதலைப் போராட்டம் தடைகளைத்தாண்டி விடுதலையின் வாசலுக்கு வந்து நிற்பதை நீங்கள் அறிவீர்கள். எமது போராட்டத்தில் ஒவ்வொரு தடை ஏற்பட்ட போதும் குழப்பங்களும் சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் அனைவருக்கும் ஏற்பட்டிருக்கிறது.






நம்முடைய நோக்கம் நாம் செல்ல வேண்டிய இடம் தெளிவாக இருந்தால் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் கவலைப்படவேண்டியதில்லை. அது குறித்து சிந்திக்க வேண்டியதில்லை என்று எமது தலைவர் சொல்வார்.

இலட்சியத்துக்காக, விடுதலைக்காக எங்களை முழுமையாக நாங்கள் அர்ப்பணித்திருக்கி றோம். இன்று தமிழர்கள் முக்கியமான கால கட்டத்தில் நிற்கிறார்கள். இன்று தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற சுதந்திர வேட்கை வெறி தங்களுடைய தமிழ் மண்ணில் வாழ்வதற்கானது. எந்த கலக்கமும் இல்லாமல் தயக்கமும் இல்லாமல் நாம் போராட வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலமாக நம் பிரச்சினை தீருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. உயிரிழப்புக்களின்றி இந்தப் பிரச்சினை தீரவேண்டும் என்ற ஆசை பலருக்கும் உண்டு.

கடந்த தேர்தலில் சிங்களவர்கள் தங்களுடைய சரியான தலைவரை தேர்ந்தெடுத்திருக்கிறார் கள். தங்களுடைய தேசம் என்ற உணர்வில் அவர்கள் தலைவரைத் தெரிவு செய்திருக்கிறார்கள்.

அந்த சிங்களத் தலைவர் இன்று சர்வதேச சமூகத்தின் முன்பாக இனவாதியாக தன்னைக் காட்டிக் கொள்ளமுடியாதிருப்பதால் பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த அவர் நாடகமாடத் தான் வேண்டும். ஆனால் அவர் இப்படியான நாடகமாட அவர் கூட்டு சேர்ந்துள்ள இனவாதக் கட்சிகள் எத்தனை காலம் அனுமதிக்கும் என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இனவாதக் கட்சிகள் இருந்தால்தான் எங்கள் தேவையை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

நாம் கடந்து வந்த பாதையை சரியாகப் பாருங்கள். நம் தலைவர் எப்படியாக வழிகாட்டினார் என்று பாருங்கள். இன்று கூட தாயகத்தில் யுத்தச் சூழலுக்கு மத்தியில்தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.யுத்தத்தை எதிர்கொள்ள ஆயத்தமான நிலையிலே போராளிகள் உள்ளனர். ஒவ்வொரு கட்டமாக விடயம் சார்ந்து போராளி கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர். இனிவரும் யுத்தத்தை எதிர்கொள்ள எந்தத் தயக்கமும் இல்லாமல் ஆயத்தமாக இருக்கிறோம். யுத்தத்தினூடக எங்கள் விடுதலையை வென்றெடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. விடுதலையை நாம் வென்றெடுக்க வேண்டுமாக இருந்தால் நாம் எந்த மண்ணில் இருந்தாலும் ஒட்டுமொத்த உணர்வுகளும் பங்களிப்புகளும் அதற்கு முக்கியமானதாகும்.

ஜெயசிக்குறு சமர் எங்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம். ஆனால் அந்த யுத்தத்தை எதிர்கொள்ள எமக்கு அப்போது போதிய ஆயுத பலம் இல்லை. ஆரம்ப யுத்தத்தில் சிறு சிறு ஆயுதங்களை வைத்து ஒரு சில குண்டுகளை பாவித்து தற்போது யுத்தமாக எதிர்கொண்டோம்.

பின்னர் அந்த யுத்தத்தின் போக்கு விளங்கியது. அதை வைத்துக்கொண்டு தீர்க்க தரிசனமான முடிவுகளை எடுத்து போராளிகளை தேவையான இடத்தில் நிறுத்தி சண்டை பிடிக்கும் வழிகாட்டுதல்களை தலைவர் செய்து வந்தார்.

தலைவர் தனக்குள் சில தீர்க்கதரிசனமான உணர்வுகளுடன் திட்டங்களை வைத்திருக்கிறார். தலைவரின் எண்ணத்துக்குள் தமிழீழத்தை எப்படி அடைவது என்ற திட்டம் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தும் போதுதான் அவர் கூறுவார். ஆகையால் அவரது தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாக நாம் இருக்க வேண்டும்.

எங்களுடைய யுத்த வளர்ச்சி எங்களுக்கு நிறைய பாடங்களை தந்திருக்கிறது. கையில் துப்பாக் கியை வைத்துக்கொண்டு ஓடிய ஒரு காலம் இருக் கிறது. இன்று அந்தத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு என்ன செய்யவேண்டும் என்கிற தெளிவு அனைவரிடத்திலும் உண்டு.

நீண்டகாலத்துக்குள் நிறைய விடயங்களை அனுபவரீதியாகக் கற்றுக்கொண்டிருக்கிறோம். ஓயாதஅலைகள் மூன்றின் போது எல்லைப் படையாக மக்கள் பயிற்சி எடுத்தனர். நாங்கள் அந்த மக்களுக்களுக்கு வழிகாட்டினோம். குடும்பத்தைக் கூட பார்க்காமல் நெருக்கடியான யுத்த களத்தில் நின்று தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

255 எல்லைப் படை வீரர்கள் அந்தக் களத்தில் தங்களை அர்ப்பணித்து மண்ணைப் பாதுகாத்தனர். அந்த எழுச்சியை இன்றும் அந்த மண்ணில் நேரடியாகக் காணக்கூடியதாக இருந்தது. அண்மைய நிழல் யுத்தத்தில் மக்கள் எழுச்சியைப் பார்த்த சர்வதேச சமூகம் பல விடயங்களை இப்போது ஆய்வுக்குட்படுத்திக் கொண்டிருக்கிறது.

பேச்சுவார்த்தையூடாக நமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு பல திட்டங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றை எங்களுடைய தலைவர் அரசியல் காய் நகர்த்தல் ஊடாக சமாளித்துள்ளார். அதை வியப்பாக சர்வதேசம் பார்க்கிறது . நீண்ட காலமாக சிங்கள இராணுவத்தின் பிடிக்குள் வாழ்ந்த மக்களுக்கு ஒரு தேவை ஏற்பட்டு எழுச்சி ஏற்பட்ட போது இராணுவத்துக்கு எதிராக மிக ஆக்ரோசமாக போராடினார்கள். அதைக் கண்டு உலகம் திகைத்துப் போனது.

ஆகையால்தான் தமிழ் மக்களின் தாயகப் பற்று, விடுதலை உணர்வு, புலம்பெயர் தமிழர்களின் பலம், தமிழர் தலைமைப்பீடத்தின் இராணுவ ஆற்றல் ஆகியவற்றை சர்வதேச சமூகம் இன்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.

நாம் மிக மிக பலமானவர்களாக இந்த உலகம் முன் நின்றால் எங்கள் மீதான பல குற்றச் சாட்டுக்களும் மறைந்து போகும். அத்தகைய பலத்தை உருவாக்குவதற்கான வளம் உங்களிடமிருக்கிறது. அதை உணர்ந்து நீங்கள் செயற்படவேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு.

நீங்கள் உங்கள் ஒவ்வொருவருடைய கடமை என்ன என்பதை உணர்ந்து நமது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு, செயற்பாட்டுக்கு உங்களுடைய பங்களிப்பை உணர்ந்து செயற்படவேண்டும். கிழக்கு மாகாணத்தில் கருணாவின் உதவியை வைத்துக் கொண்டு எங்கள் கையை ஓங்கவிடாமல் செய்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பு இராணுவத்துக்கு உள்ளது. ஒவ்வொரு சண்டையையும் இப்படித்தான் செய்யப்போகிறோம் என்று சொல்லிவிட்டு சண்டை பிடிப்பவர் அல்ல எங்கள் தலைவர். எந்தச் சந்தர்ப்பம் வருகிறதோ அந்தச் சம்பவங்களின் போது தான் எதைச் செய்யவேண்டும் என்று தலைவர் தீர்மானிப்பார். அதுதான் தலைவரது வெற்றியின் ரகசியம். தலைவருக்கு மேடைப் பேச்சில் விருப்பமில்லாதது போல் எங்களுக்கு மேடையில் பேசக் கூடிய தன்மை இல்லை.

தொடக்கம் தொட்டே சண்டை போராட்டத்தினூடே வளர்ந்தவர்கள் நாங்கள். செயற்பாடு ரீதியாக மக்களுக்குச் செய்து காட்டியிருக்கிறோம்.

ஆகவே நமக்கு நம் நாடு தேவை. நாம் அந்த நாட்டை அடையும் வாசலில் இருக்கிறோம். அந்த வாசலைத் திறந்து நாட்டை மீட்டெடுக்கும் முழு ஆதரவையும் அதற்கான பொருளாதார வளத்தையும் நீங்கள் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டும் என்று கேணல் ஜெயம் அங்கு மேலும் தெரிவித்தார்.(து-4)

# அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்!

## மதத் தலைவர்கள் வேண்டுகோள்

ஜெனீவா பேச்சுவார்த்தையில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை இழுத்தடிக்காமல் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றுமதத்தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களிலும் அரசாங்கம் இத்தகைய வாக்குறுதிகளைவழங்கியது என்றும் ஆனால் அவை நிறைவேற்றப்படாததன் விளைவாகவே முரண்பாடான நிலை தோன்றியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தென்னிந்திய திருச்சபையின் கிழக்குப் பிராந்திய முகாமைக்குரு அருட்திரு ஜெயநேசன் அடிகளார் கருத்து தெரிவிக்கையில்,

ஜெனீவா பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் திறந்த மனதுடன் போயிருந்தால் பேச்சு மேசையில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியும்.

இந்த உறுதி மொழிகள் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் அவை நிறைவேற்றப்படுமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே இது விடயத்தில் பொறுத்திருந்து பார்ப்பதே நல்லது. ஜெனீவா பேச்சுவார்த்தை குறித்து மக்கள் பெரிய எதிர் பார்ப்புடன் காத்திருந்தார்கள். அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வரவேற்கத்தக்கவை.

இந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதன் பின்னணியிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி என்பனவற்றுக்கு சமாதானம் அவசியமானது.

வறியநாடுகளில் ஒன்றாக இலங்கை நிற்கப் போகிறதா? இல்லையா? என்பதை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும்.

அதற்கு முக்கிய காரணிகளாக ஜெனீவா பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகளை அமுல்படுத்த வேண்டும் அதுவே முழு நாட்டுக்கும் நன்மையளிக்கும் என்றார். அம்பாறை மாவட்ட பள்ளிவாசல் சம்மேளனத்தின் உப செயலாளர் இப்றாஹிம் ஜெனீவா பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவிக்கையில்,

ஜெனீவா பேச்சை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். மிகவும் சிறப்பான முடிவு எட்டப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

ஆனால் இந்த பேச்சில் காணப்பட்ட உடன்பாடுகளை கால நீடிப்பு செய்து காலத்தை இழுத்தடித்து நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு அரசு முயலக்கூடாது.

அதேநேரம் இனிவரும் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவதற்குரிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

ஏனெனில் அவர்களை புறந்தள்ளிவிட்டு சமாதானத்தை உருவாக்கினால் அது நிரந்தர சமாதானமாக இருக்காது.

ஆகவே ஜெனீவா பேச்சின் உடன்பாடுகளை கடந்த காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளைப் போலல்லாது உடனடியாகஅவற்றை நடைமுறைப் படுத்தி அதன் மூலம் சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்றார். (க)

# பஸ் வண்டிகளை திருத்த நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பஸ் வண்டிகளைத் திருத்தியமைப்பதற்கென போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி 73 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடுசெய்திருப்பதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய நிர்வாகப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் முதல் கட்டமாக 24 இலட்சம் ரூபா செலவில் 12 பஸ் வண்டிகள் திருத்தியமைக்கப்பட்டு இவ்வார இறுதியில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப் பஸ்வண்டிகள் தனிவழிப் பாதைகளிலும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கிராமப் புறப்பாதைகளிலும்பாடசாலை சேவைகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளன. (க-9)

# செயல் திட்டங்களை அமுலாக்குவதில் தடை

புரிந்துணர்வு மற்றும் விளக்கமின்மை காரணமாக பல்வேறு செயல்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் தடைகள் ஏற்படுவதாக விவசாய அபிவிருத்தி அமைச்சர் சமல்ராஜபக்ஷ தெரிவித்தார்.

விவசாய அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, வரட்சிப் பிரதேசங்களில் வறிய மக்களின் வருமானத்துக்கான மார்க்கங்களை அபிவிருத்தி செய்தல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் உள்ளிட்டவைகளை நோக்காகக் கொண்டு இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

வறுமையை ஒழிப்பதற்காக செயற்படுத்தப்படும் சில செயற்திட்டங்கள் தொடர்பாக பல்வேறு அமைச்சுக்களூடாக விளக்கமளிக்கப்படவில்லை.

நாட்டின் அபிவிருத்திக்கு அது பாரிய சிக்கலாக அமைந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-7)

# இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து தப்பிப்பது எப்படி?

## வட.கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி

வடக்கு -கிழக்கில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிநெறியொன்று கடந்த வாரம் கொழும்பிலும் தம்புள்ளையிலும் இடம்பெற்றது.

லண்டன் சர்வதேச ஊடக உதவி மன்றத்தைச் சேர்ந்த கதர் அலன் மற்றும் எட்வின் ஆகியோர் இந்தப் பயிற்சிகளை வழங்கினார்கள்.

குறிப்பாக இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள வடக்கு -கிழக்கு பத்திரிகையாளர்கள் தாக்குதலுக்கு உட்பட்டால் எவ்வாறு முதலுதவிகளை மேற்கொள்வது என்பது பற்றியும் அவற்றில் இருந்து தப்பும் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பயிற்சியளிக்கப்பட்டது.

வட பகுதியில் இருந்து 20 பேரும், கொழும்பிலிருந்து 05 பேரும் கொழும்பில் இடம்பெற்ற பயிற்சியில்கலந்துகொண்டார்கள்.

இதேபோன்று தம்புள்ளையில் இடம்பெற்ற பயிற்சியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 25 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி நெறியின் பிரதான பயிற்சியாளரான கதர் அலன் பிரித்தானிய இராணுவத்தில் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இராணுவத்துடனும்பொலிஸாருடனும் இணைந்து பல நாடுகளிலும் தான் கடமையாற்றிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டதுடன் இராணுவத்தினர் பொலிஸாருடன் நல்லுறவைப் பேண வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பயிற்சியில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் போது இராணுவத்தினர் மற்றும் இராணுவத் புலனாய்வாளர்கள் தம்மை திட்டமிட்ட முறையில் தாக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தப் பயிற்சி நெறியில் ஏற்கனவே சண்டை இடம்பெறும் பல நாடுகளில் உள்ள பத்திரிகையாளர்களில் சுமார் ஆயிரத்தி நானூறு பேர் வரையில் பயிற்சி பெற்றுள்ளதாகவும் மேலும் ஐம்பது பேர் வடக்கு - கிழக்கில் இத்தகைய பயிற்ச்சிகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க)

# இருதரப்பினரதும் இணக்கப்பாடு வரவேற்கத்தக்கதொரு விடயம்

## அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா

ஜெனீவாப் பேச்சுவார்த் தையின் ஆரம்பத்தில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் கடுமையான நிலைப்பாட்டிலிருந்த போதிலும் இறுதியில் சுமுகமான நிலைப்பாட்டிற்கு இணங்கியமை வரவேற்கத்தக்க விடயம் என அரசாங்கம் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இரு தரப்பினருமே ஆரம்பத்தில் கடுமையான நிலைப்பாடுகளில் இருந்தனர். அரசாங்கத் தரப்பில் நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக நாம் கடுமையான நிலைப்பாட்டுடன் பேசினோம்.

எனினும் பேச்சுவார்த்தையின் இறுதியில் சுமுகமான நிலை ஏற்பட்டு தற்போது நிலவுகின்ற வன்முறைகள், கொலைகள் என்பவற்றை நிறுத்துவதற்கான இணக்கப்பாடுகள் காணப்பட்டன.

விசேடமாக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முன்னெடுக்கின்ற அனைத்து வன்முறைகளையும் நிறுத்தி, அமைதியான சுழ்நிலையினை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இரு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளமையை சர்வதேச சமூகம் முக்கியமான விட யமாகக் கருதுகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-4)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்கனவே ஐ.தே.கட்சி தோற்றுவிட்டதாம்

## கட்சி அமைப்பாளர் எஸ்.பி திசநாயக்க

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தோற்று விட்டது என்று அக்கட்சியின் அமைப்பாளர் எஸ். பி. திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களினுள் எழுந்துள்ள விரக்தி மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் மக்களுக்கு குறிப்பிடத்தக்களவு சேவையாற்றியவர்கள் நாளுக்கு நாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்வதனால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி ஏற்கனவே தோல்வியடைந்து விட்டதாக எஸ்.பி.திசநாயக்க கூறியுள்ளார்.

அநேகமானவர்கள் எதிர்பார்த்த வகையில் கடந்த தேர்தலின் பின்னர் கட்சியினுள் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை இந்த நிலைக்கு பெரிதும் காரணமாகியுள்ளது எனத் தெரிவிக்கும் எஸ்.பி திசநாயக்க தான் சிறையிலிருந்து விடுதலையான பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் புதிய எதிர்பார்ப்பு தோன்றியிருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது என்றார். (க)

# வெளிநாடுகளுக்குத் தொழில்தேடிச் செல்லும் பெருந்தொகையான இலங்கை மனநல மருத்துவர்கள்

(கொழும்பு)

இலங்கையில் மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்த அதிகளவான மனநல வைத்தியர்கள் வெளிநாடுகளில் பணியாற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த மனநல வைத்தியர்களில் 380 பேர் இங்கிலாந்தில் பணியாற்றுகின்ற அதே நேரத்தில் இலங்கையில் 35பேர் மாத்திரமே பணியாற்றுகின்றார்கள்.

இலங்கையில் மன நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கைகள் அதிகரித்து வருவதுடன் மனநல மருத்துவர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகின்றது.

இதேசமயம் மனநோய் காரணமாக வருடாந்தம் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பதாக இலங்கை மனநல மருத்துவர்கள் சங்கம் மேற்கொண்டஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது.

வருடாந்தம் 105 மனநல மருத்துவர்கள் பயிற்சி முடித்து வெளியேறும் நிலையில் 24 பேர் மாத்திரமே சொந்த நாட்டில் பணிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (க-9)

## தவறுதலான விபத்தில் போராளி வீரச்சாவு

(கற்கோவளம்)

வன்னி மாவட்டம் ஜெயபுரம் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான விபத்தின் போது போராளி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை வீரச்சாவடைந்துள்ளார்.

மேஜர் நிதன் என அழைக்கப்படும் மட்டக்களப்பு பாவற்கொடிச் சேனையைச் சேர்ந்த இராசரத்தினம் காளிதாஸ் என்பவரே வீரச்சாவடைந்தவராவார். (க)

## ஹாட்லி கல்லூரிக்கு பஸ்வண்டி

(துன்னாலை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் பிரத்தியேக பாவனைக்கென 25 ஆசனங்களைக் கொண்ட பேருந்து வண்டி ஒன்றை இலங்கை நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

22ஆம் திகதி கல்லூரியை வந்தடைந்த இப்பேருந்தை கல்லூரியின் பிரதி அதிபர் இராஜேஸ்காந்தன் பொறுப்பேற்றார்.

இப்பேருந்து கிடைத்ததினால் மாணவர்களின் சுற்றுலா மற்றும் கல்லூரிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகள் என்பவற்றுக்கு செல்ல பேருதவியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-10)

## சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைச் சந்தையில் கிலோ 40 ரூபாய் வரை விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்பொழுது 20ரூபாவிலிருந்து 30 ரூபா வரை விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் வெங்காயப் பூ கட்டு ஒன்று பத்து ரூபாவாக விற்கப்படுகின்றது.

வெங்காய அறுவடை கடந்த வாரம் முதல் நடைபெறுவதே இவ்விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (க-72)

## முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவ பரிபாலனசபை இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்து நாகரிகம், இந்து சமயப் பாட முன்னோடிப் பரீட்சைகளை அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்துநாகரிகம், இந்து சமயப் பாடங்களுக்கான பரீட்சைகள் குறிப்பிட்ட இரு தினங்களிலும் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளதாகவும் இப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான நேர அட்டவணை, சுட்டிலக்கம் அடங்கிய இணைப் பிரதி கிடைக்காத பாடசாலை அதிபர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் சபையின் தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (க-9)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(தென்மராட்சி)

ஆரம்ப கல்வி உதவிப் பணிப்பாளரின் மோட்டார் சைக்கிள் ஒன்று அண்மையில் திருட்டுப் போயுள்ளது.

கொடிகாமம் பிரதேச சபை செயலகத்தின் அருகே உள்ள வீதியில் நிறுத்தப்பட்டிருந்த போதே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

இது சம்பந்தமாக கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-108)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்


**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

13 *(சென்றவாரத் தொடர்ச்சி....)*

ஆயுதப் பிணக்குகள், பிள்ளைகள் மீது கெடுதியான விசாலமான பாதிப்பை ஏற்படுத்துவதோடு நிலையான சமாதானம் தோன்றுவதற்குப் பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் நீண்ட காலப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணத்தினால் கவலையடைந்து,

ஆயுதப் பிணக்குகள், இடம்பெறும் போது பிள்ளைகளை இலக்கு வைப்பதையும் சர்வதேசச் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற பிள்ளைகள் குழுமும் இடங்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதையும் கண்டிப்பதுடன்,

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் உரோமாபுரி சாசனம் எற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையையும் குறிப்பாக அதிலுள்ள 15 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யுத்த நடவடிக்கைகளிலும் இராணுவ செயற்பாடுகளிலும் சேர்த்துக் கொள்வதையும் சர்வதேச வாரியான சண்டைகளிலும் (போர்களிலும்) சர்வதேச ரீதியற்ற சண்டைகளிலும்



பிள்ளைகளைத் தீவிரமாக ஈடுபடுத்துவதையும் யுத்தக் குற்றமாக்கியுள்ளமையை கவனத்திற் கொண்டு,

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு அவர்கள் ஆயுதப் பிணக்குகளில் சம்பந்தப்படுவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதைக் கவனத்தில் எடுத்து,

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் முதலாம் உறுப்புரை அச்சமவாயத்தின் நோக்கங்களின் பொருட்டு, 18 வயதுக்குக் குறைந்த மனிதப் பிறவி ஒவ்வொன்றும், அதற்குப் பிரயோகிக்கப்படும் சட்டம் பராயமடையும் வயதைக் குறைத்துக் கூறினாலன்றி, சிறுவனாக அல்லது சிறுமியாகக் கொள்ளப்பட வேண்டும் எனக் கூறியிருப்பதைக் கவனத்தில் எடுத்து,

ஆயுதப் படைகளுக்கு ஆட்சேர்த்தல், சண்டையில் (போரில்) பங்குபற்றல் ஆகியவற்றுக்கான வயதை உயர்த்தும் சமவாயத்தின் பூர்வாங்க ஆவணம், பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடன் தொடர்புடைய எல்லாச் செயல்களுக்கும் அவர்களின் அதியுயர் நலனே பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டுமென்ற தத்துவத்தைச் செயற்படுத்துவதற்குப் பெரிதும் உதவும் என்பதையிட்டுத் திருப்தியடைந்து,

1995 டிசம்பரில் நடைபெற்ற செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் இருபத்தாறாவது சர்வதேச மகாநாடு, பதினெட்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் சண்டையில் (போரில்) சம்பந்தப்படாமலிருப்பதற்குப் பிணக்கில் சம்பந்தப்பட்டோர் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளதைக் கவனத்திற் கொண்டு,

சர்வதேசத் தொழில் நிறுவனம் 1999 ஜூன் மாதத்தில் ஒருமனதாக ஏற்றுக் கொண்ட, மிகவும் மோசமான சிறுவர் தொழில் முறைகளைத் தடைசெய்வதற்கும் இல்லாதொழிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பது பற்றிய இல. 182 சமவாயம், (Prohibition and Immediate Action for the Elimination of the Worst For ms of Child Labour) ஆயுதப் பிணக்கில் ஈடுபடுத்துவதற்குப் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி அல்லது பலவந்தப்படுத்திச் சேர்பதைத் தடை செய்கிறது என்பதை வரவேற்று,

அரசின் ஆயுதப் படைகளிலிருந்து வேறுபட்ட ஆயுதக் குழுக்கள் பிள்ளைகளைச் சேர்த்து பயிற்சியளித்து நாடுகளின் எல்லைகளுக்குள்ளும் அவற்றுக்கு வெளியேயும் போரிற் பயன்படுத்துவதை மிகக் கவலையுடன் கண்டிப்பதோடு பிள்ளைகளைப் போரணிகளிற் சேர்த்துப் பயிற்றுவித்து, பயன்படுத்துவோர் அவற்றுக்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி,

ஆயுதப் பிணக்கில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பினரும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடப்பாட்டை நினைவுபடுத்தி,

இப் பூர்வாங்க ஆவணம், ஐக்கிய நாடுகள் சாசனத்தின், உறுப்புரை 51-வது உட்பட, அதன் கொள்கைகளுக்கோ நோக்கங்களுக்கோ, உகந்த வேறு மனிதாபிமானச் சட்டத்தின் தரத்திற்கோ பாதிப்பை ஏற்படுத்தாது என்பதை வலியுறுத்தி,



பிள்ளைகள் முழுமையான பாதுகாப்புக்கு குறிப்பாக ஆயுதப் பிணக்கு, அந்நிய ஆதிக்கம் ஆகியவற்றின் போது சாசனத்திலுள்ள கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் பூரண மதிப்பளிக்கும் சமாதான, பாதுகாப்பு சூழ்நிலையும், உகந்த மனித உரிமை விதிகளைக் கடைப்பிடித்தலும் இன்றியமையாதவை என்பதை மனதில் இருத்தி,

பொருளாதார, சமூகநிலை, பால் வேறுபாடு போன்ற காரணங்களால் இப் பூர்வாங்க ஆவணத்துக்கு முரணாக ஆட்சேர்ப்புக்கும், சண்டையில் ஈடுபடுத்தப் படலுக்கும் ஆளாகக்கூடிய பலவீனமான நிலையிலுள்ள பிள்ளைகளின் விசேஷ தேவைகளை ஏற்றுக்கொண்டு,

ஆயுதப் பிணக்குகளில் பிள்ளைகள் சம்பந்தப்படுவதற்கான பொருளாதார, சமூக அரசியல் அடிப்டைக் காரணங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து,

இப் பூர்வாங்க ஆவணத்தைச் செயற்படுத்துவதற்கு சர்வதேச ஒத்துழைப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவையையும், ஆயுதப் பிணக்கிற்குப் பலியான பிள்ளைகளுக்கு உடல், உள ரீதியாக புனர்வாழ்வளித்து சமூகத்தில் மீளிணைக்க வேண்டிய தேவையையும் ஏற்றுக் கொண்டு.

இப் பூர்வாங்க ஆவணத்தைச் செயற்படுத்துவது தொடர்பான தகவல் பரப்பல், ஆறிவூட்டல் நிகழ்ச்சிகளில், சமூகம் பங்கு கொள்வதைக், குறிப்பாகப் பிள்ளைகளுக்கும் பாதிப்புற்ற பிள்ளைகளும் பங்குபற்றுவதை ஊக்குவிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு,

பின்வருமாறு உடன் பட்டுள்ளன.

**உறுப்புரை 01**

தமது ஆயுதப் படைகளிலுள்ள 18 வயதை அடையாதோர் சண்டையில் (போரில்) நேரடியாகப் பங்குகொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தம்மாலான எல்லா நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 02**

18 வயதை அடையாத ஆட்களைக் கட்டாயமாகத் தமது ஆயுதப் படைகளில் சேர்ப்பதை அரச தரப்பினர் தவிர்க்க வேண்டும்.

**உறுப்புரை 03**

1. அரச தரப்பினர், தமது தேசிய ஆயுதப் படைகளில் சுயவிருப்பின் பேரில் சேர முன்வரும் ஆட்களைத் திரட்டும் போது, சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 38ஆம் உறுப்புரையின் 3ஆம் பந்தியில் உள்ள தத்துவத்தைக் கணக்கிலெடுத்து, சமவாயத்தின் கீழ் 18 வயதுக்குக் குறைந்தோர் விசேஷ பாதுகாப்புக்கு உரியவர்கள் என்பதையும் அங்கீகரித்து, குறைந்தபட்ச வயதை உயர்த்த வேண்டும்.

2. ஒவ்வொரு அரசதரப்பும், இப் பூர்வாங்க ஆவணத்தை ஒப்புக்கொண்டதும் அல்லது அதில் சேர்ந்து கொண்டதும், தன் தேசிய ஆயுதப் படையில் சுயமாகச் சேருவதற்கு அனுமதிக் கப்படும் வயதைத் தெரிவிக்கும், கட்டுப்படுத்தும் பிரகடனத்தை வைப்புச் செய்தல் வேண்டும். ஆட்சேர்ப்பு, கட்டாயமாகவோ பலவந்தமாகவோ மேற்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்கு கையாளப்படும் பாதுகாப்புக்களையும் அப் பிரகடனம் விவரிக்க வேண்டும்.

3. 18 வயதுக்குக் குறைந்தோரை சுயவிருப்பின் பெயரில் தம் ஆயுதப் படையில் சேர அனுமதிக்கும் அரசதரப்பினர் குறைந்தபட்சம் பின்வரும் பாதுகாப்புக்களைப் பேண வேண்டும்.

(அ) அந்த ஆட்சேர்ப்பு உண்மையாகவே சுயவிருப்பின் பாற்பட்டது.

(ஆ) அந்த ஆட்சேர்ப்பு படையில் சேருபவரின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தெரிந்த சம்மதத்துடன் நடத்தப்பட்டது.

(இ ஆயுதப் படையில் சேர்க்கப்படுவோருக்கு படைச் சேவையின் போது ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிப் பூரணமாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஈ)ஆயுதப்படையில் சேருவோர் தேசிய படைகளில் சேர்க்கப்படுவதற்கு முன்பு தங்கள் வயதைப் பற்றிய நம்பத்தக்க ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும்.

*(தொடரும்)*

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## சேர் சீ.வீ.ராமன்



(1888–1970): நோபல் பரிசு (த.க.) பெற்ற முதல் இந்திய விஞ்ஞானி சேர் சீ.வீ.ராமன். இவர் தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள மாங்குடி என்னும் ஊரில் 1888 நவம்பர் 7ஆம் திகதி பிறந்தார். இவரது முழுப் பெயர் வெங்கடராமன்.

ராமன் கல்வி கற்பதில் மிகவும் ஆர்வமுடையவராய் இருந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து பௌதிகத்தை முதற் பாடமாகக் கொண்டு முதன்மையாகத் தேறிப் பட்டம் பெற்றார். அப்பொழுது இவருக்கு வயது பதினாறு.

முதலில் இவர் கல்கத்தாவில் துணைத் தலைமைக் கணக்கராகப் பதவி பெற்றார். பின்பு பர்மாவிலுள்ள ரங்கூனிலும், பின்னர் நாகபுரியிலும் பணியாற்றினார். அரசாங்கப் பணி புரிந்து வந்தபோதிலும் இவர் மனம் விஞ்ஞான ஆராய்ச்சியையே நாடியது. பின்பு கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டதும் அங்குள்ள அறிவியல் வளர்ச்சிக் கழகத்தைக் கண்டார். அதன் தலைவரிடம் அனுமதி பெற்று ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் கழகத்தின் ஆய்வுகூடத்தில் ஆய்வுகளைச் செய்துவந்தார்.

இதைத் தொடர்ந்து 1917இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியல் கல்லூரியொன்றில் பேராசிரியர் பதவி இவருக்குக் கிடைத்தது. ஒளிச்சிதறலில் படு கதிருக்கும் விடு கதிருக்கும் அதிர்வெண்ணில் வேறுபாடு இருப்பதையும், இது மூலக்கூற்றின் உள்ளமைப்புக்குத் தக்கவாறு மாறுபடுகிறதென்பதையும் கண்டறிந்தார். இதற்கு 'ராமன் விளைவு' (Raman Effect) என்பது பெயர்.

1928ஆம் ஆண்டில் இவர் தமது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டார். 1930இல் இவருக்கு பௌதிகத்திற்கான நோபல் பரிசு (த.க.) வழங்கப்பட்டது.

பெங்களூரில் நிறுவப்பெற்ற இந்திய அறிவியற் கழகத்தின் தலைவர் பொறுப்பை 1933ஆம் ஆண்டில் இவர் ஏற்றார். 1949இல் தாமாகவே ஓர் ஆராய்ச்சிக்கழகத்தை (Raman Research Institute) இவர் நிறுவினார். ஆங்கில அரசு சீ.வீ.ராமனுக்கு சேர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இந்தியக்குடியரசு 1954ஆம் ஆண்டில் இவருக்கு 'பாரத ரத்னா' என்னும் விருதை அளித்துப் பாராட்டியது. இவர் 1970 நவம்பர் 21ஆம் நாள் தம் 82ஆம் வயதில் பெங்களூரில் காலமானார்.

## நல்ல மனமே அழகு!

அந்த மரத்தில் ஒரு கிளி வந்து குடியிருந்தது. அதற்கு எப்போதுமே தான் அழகாக இருக்கிறோம் என்ற கர்வம் உண்டு. அங்கு ஒரு காகம் வந்து அமர கிளிக்கு கொண்டாட்டமாகப் போய்விட்டது.

காகத்தின் அருகில் சென்ற கிளி ''காக்காயே! நீ ஏன் இவ்வளவு கறுப்பாக இருக்கிறாய்? இதுபற்றி நீ கவலைப்படுவதே கிடையாதா? இதற்காக நீ என்ன தான் செய்யப் போகிறாய்? என்னைப் பார்... பச்சை பசுமை நிறம். பவள செந்நிற வாயோடு எவ்வளவு அழகாக இருக்கிறேன்'' என்று வழக்கம் போல தன் பெருமைகளை சொல்ல ஆரம்பித்தது.

காகம் அவசரமாக குறுக்கிட்டுப் பேசியது ''உன் அழகு, பெருமை அப்புறம் இருக்கட்டும்.... முதலில் உன்னை குறிபார்த்து நிற்கும் அந்த வேடனிடமிருந்து தப்பும் வழியைப்பார்...'' என்று சொல்லிவிட்டு பறந்து சென்று தூரத்தில் அமர்ந்து கிளியைப் பார்த்தது.


கிளி ஏளனமாகச் சிரித்தது. ''நீ என் பக்கத்தில் உட்கார்ந்ததும் உன் அவலட்சணம் பளிச்சென தெரிகிறது என்பதற்காக தப்பிக்கப் பார்க்கிறாய்'' என்று அது சொல்லி முடிக்கு முன் வேடனின் கல் இறக்கையில் பட்டு இரத்தம் கொட்டியது. கீழே விழப் போன கிளி கிளைகளுக்கு இடையில் சிக்கி நின்றது.

வேடன் மரத்தின் மேல் ஏற ஆரம்பித்தான். அந்த நேரத்தில் காக்கா சடாரெனப் பறந்து வந்து கிளியை தூக்கிக் கொண்டு வேறு மரத்தில் இருந்த ஒரு கூட்டினுள் பத்திரமாக வைத்தது.

கிளி நன்றியுடனும், வெட்கத்துடனும் கண்களில் கண்ணீர் மல்க காகத்தைப் பார்த்து பேச ஆரம்பித்தது.

''நான் உன்னை ஏளனமாகப் பேசியதைக்கூட நீ பொருட்படுத்தாமல் என்னைக் காப்பாற்றி இருக்கிறாயே. உன் மனம் ரொம்ப அழகானது என்று இப்பத்தான் எனக்குப் புரிகிறது. இப்ப எனக்கு நீ அழகாகத் தெரிகிறாய். என்னை மன்னித்துவிடு. இயற்கையாய் அமைகின்ற விஷயங்களை ஏளனம் செய்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை உணர்ந்து கொண்டேன்'' என்றது கிளி.

காகம் சிரித்தது. ''நீ ஏளனம் செய்தவுடன் அதைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை கொள்பவன் நான் அல்ல. நீ கவலைப்படாதே. இயற்கையின் படைப்பில் நீ அழகான கிளி.. நான் கறுப்பான காகம். இதைப் பற்றி யோசிக்கவோ, மாற்றவோ எதுவும் இல்லாதபோது நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? முதலில் நமக்குத் தேவை பறவையபிமானம். வாழ்தல் மட்டுமே இங்கு முக்கியம்'' என்று பேசியபடியே கிளிக்கு முதலுதவி சிகிச்சை செய்யத் தொடங்கியது.



கிளிக்கு புத்தி வந்தது. வாழ்க்கைக்கு எது முக்கியம் எனப்புரிந்து கொண்டது. மறுபடி தனக்கு பறக்கும் சக்தி வந்ததும் மற்றவர்களுக்கு உதவவும் நேரம் ஒதுக்க வேண்டும் என்று முடிவு செய்தது.

## இயற்கை முறையில் நீர்த் தூய்மை!



சூடானில் ஓடும் நதியின் கரையோரம் இருக்கும் ஒரு வகைக் களிமண் ராவாக் என்று அழைக்கப்படுகிறது.

ராவாக் களிமண்ணை ஒரு லீற்றர் நீரில் 1.5 முதல் 2 கிராம் வரை சேர்த்தால் கலங்கிய நீரிலுள்ள சின்னஞ்சிறிய மிதக்கும் அசுத்தங்களை ஒதுக்க முடிகிறதெனக் கண்டுபிடித்துள்ளனர். இதனால், நுண்ணங்களின் எண்ணிக்கையையும் குறைக்க முடிகிறதாம்.

மொரிங்க ஒலி பெரா என்ற செடி விதையை கலங்கியுள்ள நீரில் கலந்தால் தூய்மையான நீர் கிடைப்பதாகத் தெரிகின்றது. ஒரு லீற்றர் தண்ணீரைத் தூய்மை செய்ய 1/2 விதை போதும்.

நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது மேலே குறிப்பிட்டுள்ள இயற்கை முறைகளால் சூடான் நாட்டினர் கலங்கிய நீரைத் தூயதாக மாற்றி விடுகின்றனர்.

## பன்றி!



பன்றி மணிக்கு 11 மைல் வேகத்தில் ஓடும். லாஸ் ஏஞ்சலிஸ் நகரின் லாபிரேட் நூலகத்தில் அழகான ஓவியங்களை வரைந்து காட்டி, ஸ்மீத்பீல்டு என்ற பன்றி, பார்வையாளர்களை வியக்க வைக்கிறது.

* பன்றிக்கு 35000 ருசி அரும்புகள் உள்ளன.
* 7000 ஆண்டுகளாகச் சீனர்கள் பன்றிகளை வளர்ப்புப் பிராணியாக வளர்த்து வருகின்றனர்.
* பன்றி ஒரு நாளில் 8 மணி நேரம் தூங்குகிறது.
* தாடியுள்ள பன்றிகள் இந்தோனேஷியாவில் காணப்படுகின்றன.
* பன்றியின் வயிறு 8 லீற்றர் அளவுள்ள உணவுப் பொருட்களை வைத்துக் கொள்ளப் போதுமானதாக உள்ளது.
* பன்றி மணிக்கு மூன்று மைல் தூரம் ஓடினால் பெரிய காரியம்.
* 25-6-1961 அன்று டென்மார்க் நாட்டில் ஒரு பன்றி ஒரே சமயத்தில் 34 குட்டிகளை ஈன்றது.

## தெரிந்து கொள்வோமா?

*கமரா என்ற ரோமன் மொழிச் சொல்லுக்குத் 'தனியான இருட்டு அறை' என்பது பொருள். புகைப்படக்கருவியும் ஓர் இருட்டு அறைதானே.

*மருந்து என்பதை ஆங்கிலத்தில் மெடிசின் என்கிறோம். இச்சொல் மெடிகார் என்ற இலத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது. அதற்கு 'நான் குணப்படுத்துகிறேன்' என்றுபொருள்.

*ரெலிபோன் என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து உருவானது. அதற்கு 'தூரத்திலிருந்து பேசுதல்' என்று பொருள்.

வீடியோ என்பது இலத்தீன் மொழிச் சொல். இதற்கு 'நான் பார்க்கின்றேன்' என்று பொருள்.

*முதலில் எழுதுவதற்கு வாத்தின் இறகுகளை பயன்படுத்தினர். இறகு என்பதை பென்னா என இலத்தீன் மொழியில் கூறுவர். இதிலிருந்து வந்ததே 'பென்' என்ற ஆங்கிலச் சொல்.

## காக்கைகளின் வகைகள்!

மணிக்காக்கை, அண்டங் காக்கை, கள்ளிக்காக்கை, நீர்க்காக்கை, கத்திரி மூக்குக் காக்கை, கலிக்கிக் காக்கை, இரப் காக்கை, மாட்டுப்புழு கக்கை, வெள்ளைக் காக்கை.

நம் நாட்டில் காணப்படுபவை மணிக்காக்கை, அண்டங் காக்கை. அனைத்து இனங்களும் இங்கிலாந்து நாட்டில் உள்ளனவாம்.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

19

## சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டி

ஆரம்ப காலம் தொட்டு விளையாடப்பட்டு வந்த டெஸ்ட் போட்டிகளில் மக்களின் ஆர்வம் குறைய ஆரம்பித்த நேரத்தில் உருவாக்கப்பட்ட போட்டி தான் ஒருநாள் கிரிக்கெற் போட்டியாகும்.

ஒருநாள் போட்டியில் விறுவிறுப்பு, பதற்றம், ஏக்கம், மனப்பக்குவம் என்பவற்றை குறிப்பிட்ட 10 மணி நேரத்திற்குள் விளையாடும் வீரர்களிடம் மட்டுமல்ல, இரசிகர்களிடையேயும் காணக்கூடியதாக இருக்கின்றது.

உலகில் கால்பந்துக்கு அடுத்தபடியாக அதிக இரசிகர்களைக் கொண்ட போட்டியாக இப்போட்டி காணப்படுகின்றது.

1971ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் முதன்முதலாக ஒருநாள் கிரிக்கெற் போட்டி விளையாடப்பட்டது. இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் இப்போட்டியில் விளையாடின.

தற்போது டெஸ்ட் அந்தஸ்துள்ள 10 அணிகளும் டெஸ்ட் அந்தஸ்தில்லாத அணியொன்றும் ஒருநாள் போட்டியில் விளையாடுகின்றன.

இதேவேளை உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகள் மற்றும் மினி உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகள் என்பவற்றுக்காக மட்டும் மேலும் 5 அல்லது 6 அணிகள் சேர்க்கப்பட்டு ஒருநாள் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, மேற்கிந்தியா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கைத சிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய டெஸ்ட் அந்தஸ்துள்ள 10 அணிகளும், டெஸ்ட் அந்தஸ்தில்லாத கென்யாவும் ஒருநாள் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இதேவேளை ஒருநாள் போட்டியில் புதிய விதிகள் (நடைமுறைகள்) என்பவற்றை ஐ.ஸீ.ஸி கொண்டுவந்துள்ளது.

இதன் விளக்கங்கள் இதுவரை வெளியிடப்படாததன் காரணமாக அதனை வாசகர்களுக்குத் தரமுடியவில்லை.

## அணிகளின் நிலைமைகள்

### அதி கூடிய ஓட்டங்கள்

398-5 (50) இலங்கை எதிர் கென்யா (கண்டி) 1995/96
397-5 (44) நியூஸிலாந்து எதிர் சிம்பாப்வே (புலவாஜோ) 2005/06
391 - 4 (50) இங்கிலாந்து எதிர் பங்களாதேஷ் (நொட்டிங்கம்) 2005
376-2 (50) இந்தியா எதிர் நியூஸிலாந்து (ஹைதராபாத்) 1999/00
373-6 (50) இந்தியா எதிர் இலங்கை (ராண்டன்) 1999
371 - 9 (50) பாகிஸ்தான் எதிர் இலங்கை (நைரோபி) 1996/97
368-5 (50) அவுஸ்திரேலியா எதிர் இலங்கை (சிட்னி) 2005/06
363-7 (55) இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான் (நொட்டிங்கம்) 1992
363- 3 (50) தென் ஆபிரிக்கா எதிர் சிம்பாப்வே (புலவாஜோ) 2001/02
360-4 (50) மேற்கிந்தியா எதிர் இலங்கை (ஹராச்சி) 1987/88
359-2 (50) அவுஸ்திரேலியா எதிர் இந்தியா (ஜொனெஸ் பார்க்) 2002/03
359- 5 (50) அவுஸ்திரேலியா எதிர் இந்தியா (சிட்னி) 2003/04

### அதி குறைந்த ஓட்டங்கள்

35 (18) சிம்பாப்வே எதிர் இலங்கை (ஹராரே) 2004
36 (18.4) கனடா எதிர் இலங்கை (பேர்ள்) 2002/03
38 (15.4) சிம்பாப்வே எதிர் இலங்கை (கொழும்பு) 2001/02
43 (19.5) பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியா (கேப்ரவுண்) 1992/93
45 (40.3) கனடா எதிர் இங்கிலாந்து (மஞ்செஸ்ரர்) 1976
45 (14) நமீபியா எதிர் அவுஸ்திரேலியா (போட்செப் ஸ்ரொம்) 2002/03
54 (26.3) இந்தியா எதிர் இலங்கை (சார்ஜா) 2000/01
54 (23.2) மேற்கிந்தியா எதிர் தென் ஆபிரிக்கா (கேப்ரவுண்) 2003/04
55 (28.3) இலங்கை எதிர் மேற்கிந்தியா (சார்ஜா) 1986/87
63 (25.5) இந்தியா எதிர் அவுஸ்திரேலியா (சிட்னி) 1980/81
64 (35.5) நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் (சார்ஜா) 1985/86

### இரு அணிகளும் (கூடுதலான ஓட்டம்)

693-15 (100) இந்தியா (349-7) எதிர் பாகிஸ்தான் (344-8) - ஹராச்சி -2003/04
664-19 (99.4) இலங்கை (249-9) எதிர் பாகிஸ்தான் (315) - சிங்கப்பூர் -1995/96
663-15 (99) அவுஸ்திரேலியா (331-7) எதிர் நியூஸிலாந்து (332-8) - கிறிஸ்றசேர்ஜ் -2005/06
662-17 (99.3) மேற்கிந்தியா (333-7) எதிர் இலங்கை (329)- சார்ஜா- 1995/96
660-19 (99.5) பாகிஸ்தான் (371-9) எதிர் இலங்கை (289)- நைரோபி-1996/97
656-10 (99.1) தென் ஆபிரிக்கா (326-3) எதிர் அவுஸ்திரேலியா (330-7) - போர்ட் எலிசபெத் - 2001/02
655 -19 (97) நியூஸிலாந்து (349-9) எதிர் இந்தியா (306)- ராஜ்கோட்-1999/00
654-19 (94.1) இந்தியா (356-9) எதிர் பாகிஸ்தான் (298) - விசாகபட்டினம் -2004/05
652-12 (100) இலங்கை (398-5) எதிர் கென்யா (254-7)- கண்டி -1995/96
651-13(99.3) இங்கிலாந்து(325-5) எதிர் இந்தியா (326-8)-லோர்ட்ஸ் -2002

### இரு அணிகளும் (குறைந்த ஓட்டம்)

73-11 (23.2) கனடா (36) எதிர் இலங்கை (37-1) - பேர்ள் - 2002/03
75-11 (27.2) சிம்பாப்வே (35) எதிர் இலங்கை (40-1) - ஹராரே- 2004
78-11 (20) சிம்பாப்வே (38) எதிர் இலங்கை (40-1) - கொழும்பு- 2001/02
88-13 (32.2) பாகிஸ்தான் (43) எதிர் மேற்கிந்தியா (45-3) - கேப்ரவுண்- 1992/93
91-12 (54.2) கனடா (45) எதிர் இங்கிலாந்து (46-2) - மஞ்செஸ்ரர்- 1979


## தற்போதைய நிலவரம்

(LASTUPDATED: 25 FEB.2006)

### அணி நிலைமை


| TEAM | MATCHES | POINTS | RATING |
|---|---|---|---|
| 1.அவுஸ்திரேலியா | 41 | 5523 | 135 |
| 2.தென் ஆபிரிக்கா | 35 | 4061 | 116 |
| 3.நியூஸிலாந்து | 34 | 3869 | 114 |
| 4.இந்தியா | 45 | 5075 | 113 |
| 5.பாகிஸ்தான் | 39 | 4353 | 112 |
| 6.இங்கிலாந்து | 27 | 2920 | 108 |
| 7.இலங்கை | 46 | 4901 | 107 |
| 8.மேற்கிந்தியா | 24 | 2105 | 88 |
| 9.சிம்பாப்வே | 23 | 1012 | 44 |
| 10.பங்களாதேஷ் | 25 | 430 | 17 |



## அணித் தலைவர்கள்




றிக்கி பொண்டிங்
அவுஸ்திரேலியா



மைக்கல் வோகன்
இங்கிலாந்து



ராகுல் டிராவிட்
இந்தியா



மார்வன் அத்தப்பத்து
இலங்கை




ஸ்ரீபன் பிளமிங்
நியூஸிலாந்து






இன்சமாம் - உல் - ஹக்
பாகிஸ்தான்




சிவ்நர்வேன்
சந்திரபோல்
மேற்கிந்தியா



கிரேம் ஸ்மித்
தென் ஆபிரிக்கா



ஹபிபுல் பஸார்
பங்களாதேஷ்



றெறிடபின்
சிம்பாப்வே

நோயல்


கென்யா
ஸ்ரீவ் ரிகோலா

## துடுப்பாட்ட வீரர்கள்

1. அடம் கில்கிறிஸ்ட் (அவுஸ்) 813
2. றிக்கி பொண்டிங் (அவுஸ்) 797
3. குமார் சங்ககார (இல) 754
3. மகேந்திரா டோனி (இந்) 754
5. மைக்கல் கிளார்க் (அவுஸ்) 744
6. கிரேம் ஸ்மித் (தென் ஆபி) 729
7. மைக் கூஷே (அவுஸ்) 721
8. யுவ்ராஜ் சிங் (இந்) 719
9. ராகுல் டிராவிட் (இந்) 709

## பந்து வீச்சாளர்கள்

1. ஷோன் பொலக் (தென் ஆபி) 838
2. பிரெட்லீ (அவுஸ்) 795
3. கிளென் மெக்ரா (அவுஸ்) 787
4. ஷேன் போண்ட் (நியூ) 745
5. டானியல் விற்றோரி (நியூ) 743
6. இர்ஃபான் பதான் (இந்) 737
7. முத்தையா முரளிதரன் (இல) 710
8. சமிந்த வாஸ் (இல) 702
9. நவீட் - உல்- ஹஸன் (பாக்) 678
10. ஸ்ரீவ் ஹர்மிஸன் (இங்) 676

## சகலதுறை வீரர்கள்

அன்றூ பிளின்ரோவ் (இங்)
ஷோன் பொலக் (தென் ஆபி)
அன்றூ சைமன்ஸ் (அவுஸ்)
இர்ஃபான் பதான் (இந்)
சொய்ப் மாலிக் (பாக்)

(அடுத்தவாரம் தொடரும்...)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

## மீள்பார்வை 62


'ராஜராஜசோழன்' படத்தில்...

எனது தாயார் இறந்தவுடன் அவர்கள் படுத்திருந்த கட்டில் முனையெல்லாம் ஊதுபத்தியின் நெருப்பால் எரிந்து விட்டது .சதா ஊதுபத்தியைக் கட்டிலின் நான்கு மூலைகளிலும் சொருகி வைத்துக்கொண்டு கட்டிலைச் சுற்றி சுற்றி வந்தார் என் தகப்பனார். அப்போதுதான் அவர்கள் தாம்பத்தியத்தின் அருமை தெரிந்தது . எவ்வளவு நாள் பார்ட்னர்ஷிப்பில் அம்மாவும் அப்பாவும் இருந்திருக்கிறார்கள். ஆகையால் யாராவது கணவன் மனைவி சண்டை போட்டுக்கொள்கிறார்களே என்று கவலைப்படாதீர்கள். அவாகளுக்கு உள் மனதில் பாசமும் பந்த மும் இருக்கும். நாமெல்லாம் அவர்களைப் பார்த்து அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். பெரி யவர்கள் பெரிவர்கள்தான்.

அறிஞர் அண்ணா மறைந்த பிறகு எனது தாயார் மறைந்தார்கள். இவை இரண்டுமே துயரமான சம்பவங்கள் தான். இதற்குப் பல ஆண்டுகள் கழித்து என் தந்தையும் மறைந்தார்.

### திரைப்படத்தில் தேசியம்

டி.எஸ்.என்: துயரம் மிக்க சம்பவங்கள் நிகழ்ந்த இந்தக் காலகட்டத்தில் கூட உங்கள் நடிப்புத் தொழிலில் கவனம் செலுத்தி சில வித்தியாசமான படங்களில் நடித்து புதுமையான பாத்திரங்களைத் திரையில் உருவாக்கித் தந்தீர்கள் .வியட் நாம் வீடு , பாரத விலாஸ், ராஜராஜசோழன், ராஜபார்ட் ரங்கதுரை, கௌரவம், தங்கப்பதக்கம் போன்ற படங்கள் 1970-1973 இல் மூன்று வருட காலத்தில் வெளிவந்த வெற்றிப்படங்கள். இவை களை நினைவு கூர்ந்து முக்கியமான விஷயங்களைக் கூற முடியுமா?


அமெரிக்காவில் குதிரைச் சவாரி...


வேட்டை....

சிவாஜி: பாரத விலாஸ் , ராஜபார்ட் ரங்கதுரை போன்ற படங்களைப் பற்றி நினைவுபடுத் தினீர்கள். நான் அரசியல் என்று நினைத்தது தேசியம் தான். என்னுடைய கருத்தை பிறர் ஒத்துக்கொள்கிறார்களோ இல்லையோ நான் தேசியம் பேசிய என்னுடைய படத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

பகத்சிங் வேஷம் போட்டுக்கொண்டு இன் குலாப் ஜிந்தா பாத், இந்துஸ்தான் ஜிந்தாபாத் என்று பாடினேன். காந்தி பிடித்த கொடி, சுபாஷ் சந்திரபோஸ் பிடித்த கொடி என்று கோஷமிட்டுப் பேசி திருப்பூர்க் குமரனாக வந்தேன்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் தேசியத்தைப் பற்றி சிந்தித்தேன் இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் பற்றி பாரதவிலாஸ் படத்தில் சொன்னேன் அந்தப் படத்தை என் நண் பர் திருலோகச்சந்தர் டைரக்டு செய்தார்.


'இந்திய நாடு என் நாடு. இந்தியன் என்பது என் பேரு...' என்று பாடி நடித்தேன். நான் போட்ட வேஷத் துக்காக மட்டும் இதைச் செய்யவில்லை என் கொள்கையே அது தான்.

டி.எஸ்.என்: ராஜாஜசோழன் சரித்திரப்படத்தில் ராஜராஜசோழனாக நடித்தது பற்றி...

சிவாஜி: நான் ஒரு சோழ்ன், தஞ்சாவூர்க்காரன். ஆகையால் நான் ராஜாஜசோழனாக நடித்தது எனக்கு மிகப் பெருமை. ஏனென்றால் என்னுடைய தாத்தா, பாட்டன் ரோலை நானே நடித்தேன். அந்தப் படத்தை ஆனந்த் தியேட்டர் உரிமையாளர் உமாபதி எடுத்தார். அந்தப் படத்தை ஏ.பி.நாகராஜன் இயக்கினார்.

சரித்திர நாடகம், சரித்திரக் கதைகள் எடுக்கும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதிகம் செலவு செய்துஎடுக்கவேண்டும். பிரம்மாண்டமான யுத்தக் காட்சிகளெல்லாம் காண்பிக்க வேண்டும். பெரிய யானை, சேனை, ஆள், அம்பு என்று கூறுவோமே அது போல் காண்பிக்க வேண்டும். இப்படியெல்லாம் காண்பித்தால்தான் ராஜராஜசோழன் நன்றாக இருக்கும்.

ஒரு சின்ன பாளையக்காரனாக கட்டபொம்மனையே பெரிய சக்ரவர்த்திபோல் காண்பித்தோம் அல்லவா? அப்படியிருக்க சக்கரவர்த்தி ராஜராஜசோழனை எவ்வளவு சிறப்பாகக் காண்பிக்க வேண்டும். அதையெல்லாம் அந்தப்படத்தில் சரியாகக் காண்பிக்கவில்லை. ஆனால் செலவு மட்டும் ஏராளமாகச் செய்தார்கள். ஒவ்வொரு பிரிண்டு போகும் போதும் பிரிண்ட் பெட்டியில் ஒரு சினிமா ஸ்கோப்லென்ஸை விலைக்கு வாங்கி வைத்து அனுப்பினார்கள். செலவுக்குக் குறைவில்லை. ஆனால் ராஜராஜசோழன் படத்தை ஒரு குடும்ப நாடகம் போல் தான் எடுத்திருந் தார்கள். நாடகம் போடும் போது அது சரியாக இருந்திருக்கலாம். ஆனால் திரைப்படத்திற்கு இந்தப் பாணி ஒத்து வருமா? இந்தப் பக்கம் மகன், அந்தப் பக்கம் அக்கா, இன்னொருபக்கம் மனைவி, மற்றொரு பக்கம் மருமகள் என்று குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டியதால் படம் அவ்வளவு சிறப்பாக ஓட வில்லை. ஆனால் ராஜராஜசோழன் என்ற பெயரும் புகழும் எனக்குக் கிடைத்தது. இப் படத்தை எடுத்தவர்களுக்கு சினிமாத் துறையில் நல்ல பெயர் கிடைத்தது. அதை மறக்கவே முடியாது.


'ராஜபார்ட் ரங்கதுரை' படத்தில்...

(தொடரும்)

# பொதுவினைத்திறன் காண் தடைப்பரீட்சை

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட 6 உயர் அரச சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் 2ஆம் மொழி பரீட்சை என்வற்றை எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்க நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இலங்கைநிர்வாகசேவை, கணக்காளர் சேவை, விஞ்ஞான சேவை, பொறியியல் சேவை, பொலிஸ் சேவை மற்றும் கட்டடக் கலைஞர் சேவையாகிய 6 சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இந்தப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

முதல் தடவையாக இந்தப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியது இல்லையென்றும் இரண்டாம் தடவையாக தோற்றுவதாயின் பரீட்சைக்கட்டணமாக 115 ரூபாவை செலுத்தவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத்தலைவர் ஊடாக எதிர்வரும் மார்ச்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டுமென்றும்பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (கு-9)

# கிளைமோர், கைக்குண்டுகளுடன் நால்வர் கைது

(புத்தளம்)

கடந்த 19ஆம்திகதிகாலியவெவ பொலிஸாரினால் கைதுசெய் யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த நால்வரில் ஒருவர் பாதாள குழுக்களுடன் தொடர்பு பட்டவர் என தெரியவருவதாக காலியவெவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.எல். பி.அபயரத்ன தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் தனியார் பஸ்ஸினை காலியவெவ வீதிச்சோதனை சாவடியில் வைத்து பொலிஸார் சோதனையின் போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2 கிளைமோர் குண்டுகளும் 2கைக்குண்டுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் இவர்கள் நால்வரை பொலிஸார்கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதையடுத்து இவர்கள் நால்வரும் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டனர்.

இந்தநால்வரிடம் இருந்து மேலதிகமானவிசாரணைகளை 5விசேட பொலிஸ்குழுக்கள் மேற்கொண்டனர். இதில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு, குற்றப்புலனாய்வு பொலிஸ் பிரிவு உட்பட மேலும் மூன்று குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களில் தற்போது இனம் காணப்பட்டுள்ளநபர் கொழும்பு புதுக்கடயைச் சேர்ந்தவர் எனவும், இவருக்கு எதிராக கொழும்பு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.(து-15)

## அங்கத்துவக் கட்டணம் 10000 ரூபாவாக அதிகரிப்பு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராக சேர் வதற்கான அங்கத்துவக் கட்டணம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஆயுட்கால உறுப்பினராகச் சேர்வதற்கு 500 ரூபா மட்டுமே அறவிடப்பட்டுள்ளது என இலங்கை செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமையகம் அறிவித்துள்ளது. (க-234)

# வாகனங்களை வாடகைக்கு வழங்க விரும்புவோர்கவனத்துக்கு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாகனங்கள் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை தேர்தல் செயலகம் துரிதமாக மேற்கொண்டுவருகிறது.

தேர்தல் பணிகளுக்காக அரச வாகனங்களும் மேலதிமாக தனியார் வாகனங்களும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படஇருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

சிறந்த இயக்க நிலையிலுள்ள தமது வாகனங்களை தேர்தல் பணிகளுக்கு வழங்க விரும்பும் தனியார் வாகன உரிமையாளர்கள் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (க-7)

# உள்ளூராட்சி வார விழா

சுன்னாகம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சிவாரவிழா நாளை பிற்பகல் 2.00மணிக்கு மருதனார் மடம் திறந்த வெளியரங்கில் வலிகாமம்தெற்கு பிரதேசசபையின் செயலாளர் ச. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க. கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண பி.உ.உ. ஆணையாளர் ம. வசந்தகுமார், யாழ்ப்பாண உ.உ.ஆணையாளர் க. இராசையா, உடுவில் பிரதேச செயலர் சி. திருவாகரன் , மருதனார் மடம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். குபேரநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி வாரமலர் வெளியிடப்படவுள்ளது. நூலின் வெளியீட்டுரையை பா . விஜயகுமார் நிகழ்த்துவார். மலரின் முதற் பிரதியை யாழ். அரச அதிபர் வழங்க, சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மா.சந்திரகாந்தன் பெற்றுக் கொள்வார்.

நூலின் ஆய்வுரையினை இளைப்பாறிய அதிபர் எஸ் . தம்பித்துரை ஆற்றுவார். தொடர்ந்து உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்படும். (க-9)

## 32 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளு டன் இணைந்திருந்த 18 வயதுக்குக் குறைந்த 32 சிறுவர்கள் அவர்களது பெற்றோருடன் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான பெயர் விபரங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் ஐ.சி.ஆர்.சி. போன்ற நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட மாணவ அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். இவர்கள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# 'பிலிம்பேர்' பத்திரிகையினால் சிறந்த படமாக 'பிளாக்' தெரிவு

## படத்தில் நடித்த அமிதாப், ராணி முகர்ஜிக்கு விருது

(மும்பை)

பிலிம்பேர் பத்திரிகை ஆண்டுதோறும் சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகைகளை தேர்வு செய்து விருதுகளை வழங்கி வருகிறது. இதற்கமைய 2005ஆம் ஆண்டுக்கான விருது நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

மும்பையில் நடந்த பிரமாண்டமான கண்கவர் நிகழ்ச்சியில் 51 ஆவது பிலிம்பேர் விருது வழங்கப்பட்டது.

அமிதாப்பச்சன், ராணி முகர்ஜி நடித்து வெற்றிகரமாக ஓடிய 'பிளாக்' படம் பல்வேறு பிலிம்பேர் விருதுகளை தட்டிச் சென்றது. அந்தப்படத்தில் சிறப்பாக நடித்ததற்காக சிறந்த நடிகர் விருது அமிதாப்பச்சனுக்கும், சிறந்த நடிகை விருது ராணி முகர்ஜிக்கும் (பிளாக்) வழங்கப்பட்டது.

சிறந்த படமாக பிளாக் தேர்வு செய்யப்பட்டது. அந்தப் படத்தை இயக்கிய சஞ்சய் லீலா பன்சாலிக்கு சிறந்த டைரக்டர் விருது வழங்கப்பட்டது.

சிறந்த துணை நடிகருக்கான விருது அபிஷேக் பச்சனுக்கும் (சர்கார்), சிறந்த துணை நடிகை விருது ஆயிஷா கபூருக்கும் (பிளாக்) வழங்கப்பட்டது.

ஏனைய விருதுகள்:-

*சிறந்த வில்லன்*- நானா படேகர் (ஆப்ரகாம்), *புதுமுக நடிகர்*- ஷினாய் அகுவா, *புதுமுக நடிகை*- வித்யாபாலன் (பர்னீதா), *சிறந்த இசை அமைப்பாளர்*- சங்கர், ஈசன், லாய் (பண்டி அவூர் பாப்ளி), *சிறந்த பாடகர்*- ஹிமேஷ் (ஆசிக் பன்யா அப்னே), சிறந்த பாடகி அலிஷா ஷினாய் (பண்டி அவூர் பாப்ளி), *வாழ்நாள் சாதனையாளர்*- சபனா ஆஸ்மி ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

விருது வழங்கும் விழாவில் நடிகைகள் மாதுரி தீட்சித், ஐஸ்வர்யாராய், மாடல் அழகிகள் நடனம் ஆடினார்கள். (க)



திருச்சியில் நடைபெறவுள்ள தி.மு.க, மாநில மாநாட்டில் பங்கேற்கவுள்ள இளைஞர் அணி, மகளிர் தொண்டரணி போன்று வடிவமைக்கப்பட்ட சிலைகள், வர்ணம் பூசும் பணிக்காக காத்திருக்கிறது.

# நடிகர், நடிகைகள் உட்பட 123 பேருக்கு கலைமாமணி விருது

(சென்னை)



நடிகர், நடிகைகள் உட்பட 123 பேருக்கு கலைமாமணி விருதுகளை முதல் அமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாமல் மக்கள் நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவேன் என்று கூறினார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் 2004 மற்றும் 2005ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விழாவில் முதல் அமைச்சர் ஜெயலலிதா கலந்துகொண்டு நடிகர், நடிகைகள் உட்பட 123 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகளை வழங்கினார். (க)

# தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான திகதி விரைவில் முடிவு செய்யப்படும்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தல் திகதி பற்றி விரைவில் முடிவு செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் கோபாலசாமி தெரிவித்தார்.

மத்திய தேர்தல் ஆணையாளர் கோபாலசாமி கடந்த 3நாட்களாக தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்து சட்டசபைத் தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு நடத்தினார்.

வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது, புதிதாக வாக்காளர்கள் சேர்க்கைக்காக குவிந்த விண்ணப்பங்கள் பரிசீலனை குறித்து அவர் தமிழக தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தேர்தல் திகதி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி அவர் விவாதித்தார்.

3 நாள் தமிழக சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு மத்திய தேர்தல் ஆணையாளர் கோபாலசாமி நேற்று முன்தினம் சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார். (க)

## இந்திய வலம்

# குஜராத்திலும் பறவைக் காய்ச்சல்

(சூரத்)

மராட்டியத்தை தொடர்ந்து குஜராத்திலும் பறவைக் காய்ச்சல் நோய் பரவி இருப்பது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது.

மராட்டிய மாநிலம், நந்துர்பார் மாவட்டம், நவபூர் பகுதியில் பறவைக் காய்ச்சல் பரவியதால் ஆயிரக்கணக்கான கோழிகள் இறந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்தப் பகுதியில் உள்ள பண்ணைகள் மற்றும் வீடுகளில் உள்ள அனைத்து கோழிகளும் கொன்று புதைக்கப்பட்டன.

நவபூர் பகுதியை ஒட்டி, குஜராத் மாநிலம், சூரத் மாவட்டத்தைச் சேர்ந்த உச்சால் தாலுகா உள்ளது. அந்தப்பகுதியிலும் பறவைக் காய்ச்சல் பீதியினால் ஏறத்தாழ 90 ஆயிரம் கோழிகள் கொன்று அழிக்கப்பட்டன.

கோழிகளிடம் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக போபாலில் உள்ள ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அதில் சில மாதிரிகளில் பறவைக் காய்ச்சல் நோய் கிருமியின் தாக்குதல் இருப்பது உறுதி செய்யப்பட்டு இருப்பதாக கலெக்டர் வத்சலா வாசுதேவ் நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்தார்.


பறவைக் காய்ச்சல் நோய் மனிதர்களுக்கும் தொற்றி உள்ளதா என்பதைக் கண்டறிய மனிதர்களிடம் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் புனே மற்றும் டெல்லியில் உள்ள ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த பரிசோதனையின் முடிவு எதுவும் இதுவரை வரவில்லை என்றும் கலெக்டர் கூறினார்.

இதற்கிடையில் மராட்டியத்தில் பறவைக் காய்ச்சல் பரவிய நவபூர் பகுதியை சேர்ந்த சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனை மற்றும் 94 பேர்களிடம் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளின் பரிசோதனை முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

இந்த முடிவுகளின்படி நவபூர் பகுதியில் மனிதர்கள் யாரும் பறவைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது என மராட்டிய மாநில பொது சுகாதாரத்துறை செயலாளர் விஜய் சத்பீர்சிங் இந்தத் தகவலை தெரிவித்தார். (க)

# எம்.பிக்கள் என்ன செய்தனர்?

# கன்னிப் பேச்சில் முரளி ஆவேசம்!



நல்லது செய்வதாக கூறி பொய் சொல்லி வாக்கு வாங்கி வெற்றி பெற்ற 40 எம்.பிக்கள் தமிழகத்துக்கு என்ன செய்தனர்? என மதுரையில் நடந்த அ.தி.மு.க பொதுக்கூட்டத்தில்நடிகர்முரளி தனது கன்னிப் பேச்சில் ஆவேசமாக கேள்வி எழுப்பினார்.

முதல்வர் ஜெயலலிதாவின் 58வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை அ.தி.மு.க சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் நடிகர் முரளி தனது முதல் அரசியல் மேடையில் பேசியதாவது,

ஏழு கட்சிகள்கூட்டணி, அதன்தலைவரை (கருணாநிதி) நம்ப உள்ளது. ஆனால் ஜெயலலிதா ஏழுகோடி மக்களை நம்பவுள்ளார்.

அரசியலுக்கு வருவதைப் பற்றி யோசிக்கிறேன். பிறகு சொல்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கூறுகிறேன் என நான் சொல்லவில்லை.

அரசியலுக்கு வருவது குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே முடிவு செய்து விட்டேன். அதன்படி நான் மட்டுமல்ல என் குடும்பமே அ.தி.மு.கவில் சேர்ந்தது.

நல்லது செய்வதாகக் கூறி மக்களிடம் பொய் சொல்லி வாக்கு வாங்கி வெற்றி பெற்ற 40 எம்.பிக்கள் தமிழகத்துக்கு என்ன செய்தனர்? ஒன்றுமே செய்யவில்லை என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.

முதல்வர் ஜெயலலிதாவின் 58ஆவது பிறந்த நாளில் அவருக்கு பரிசு கொடுக்க வேண்டும். அந்தப் பரிசு தேர்தலில் வெற்றி பெறச் செய்து அவரை முதல்வராக்குவது தான் என்றார். (க)

# தேர்தல் பணியை பகிர்ந்தளிக்க அ.தி.மு.க கணக்கெடுப்பு

(தேனி)

தேர்தல் பணிகளை பகிர்ந்தளிக்க வசதியாக அ.தி.மு.கவினர், அனைத்து தொகுதியிலும் ஜாதி வாரியாக உள்ள வாக்குகள் குறித்து கணக்கெடுத்து வருகின்ற னர்.

சட்டசபை தேர்தலுக்கான பணிகளில் அ.தி.மு.க.வினர் கடந்த சில நாட்களாக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புதிய வாக்காளர் சேர்ப்பு பணிகளை முடித்துள்ள நிலையில் தற்போது ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஜாதி வாரி வாக்குகளை கணக்கெடுப்பதில் கட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

இக்கணக்கு தோராயமாகவே இருக்க முடியும். இருந்தபோதிலும் கணக்கெடுப்பின் அடிப்படையில் பூத் கமிட்டிகளின் பொறுப்பாளர்கள் நியமனம், தேர்தல் வரவு -செலவு மேற்பார்வை, முக்கிய ஜாதி தலைவர்களை அணுகி அவர்களின் ஆதரவை பெறுவது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் ஒவ்வொரு ஜாதியிலும், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் நிர்வாகிகள் ஒவ்வொருவரும் தங்கள் ஜாதிகளில் குறிப்பிட்டஅளவு வாக்குகளை பதிவு செய்ய வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்படவுள்ளது. (க)

## கோழிக்கறி விற்பனை மீண்டும் விறுவிறுப்பு

பறவைக் காய்ச்சல் நோய் பற்றிய பீதி தற்போது தணிந்து வருவதால் கோழிக்கறி விற்பனை மீண்டும் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. கோழி முட்டை விற்பனையும் சூடு பிடித்துள்ளது என இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (க)

# மதுவில் சயனைட் கலப்பு 3 பேர் மரணம்!

பெங்களூர் ஸ்ரீராமபுரம் ஸ்வாதந்திரா பாளையம் என்ற இடத்தில் சீனிவாசா மது பார் என்ற மதுபானக் கடை உள்ளது.

இங்கு சில நாட்களுக்கு முன் மது குடித்த சந்திரசேகர் தாசப்பா, ராஜேஷ்குமார் ஆகியோர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து இறந்தனர்.

இதனால் மதுக்கடையில் பரபரப்பு ஏற்பட்டது. 3 பேரும் அருந்திய மதுவில் விஷம் கலந்து இருக்கலாம் அல்லது போலி மது பானம் விற்பனை செய்து இருக்கலாம் என்று கருதி மதுக்கடையை அங்கிருந்தவர்கள் அடித்து நொருக்கினார்கள்.

பொலிஸார் விரைந்து சென்று 3 சடலங்களையும் கைப்பற்றி விசாரணை நடத்தினார்கள். பிரேத பரிசோதனையில் மதுவில் சயனைட் கலந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் தான் 3 பேரும் மது குடித்த உடனே பலியாகி இருக்கிறார்கள்.

பலியான 3 பேரின் குடல் பகுதி மருத்துவப் பரிசோதனைக்காக ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முன் விரோதத்தில் அவர்கள் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று பொலிஸார் கருதுகிறார்கள். (க)

அறநெறியில் நிற்கிற சான்றோர்களுக்கே நாம் வணக்கம் செலுத்த வேண்டும். அரசியலும், தனி மனிதனும் ஒரே அன்பு நெறியின்கீழ் அமர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் அமைதி நிலவும்.

-பெர்னார்ட் ஷா

வலம்புரி

## ஜெனீவாவில் நடந்த பேச்சால் ஊர் இழந்தார் பெற்றபயன் யாதோ?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும் சமாதானத் தீர்வை எட்டுவதற்கும் எல்லாத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு மிகவும் தேவையானதாகும்.

ஜெனீவாவில் நடந்த பேச்சுக்கள் எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்தியுள்ளது போல் தெரிகின்றது.

ஆயினும் ஜெனீவாப் பேச்சுடன் எந்த விதமான முடிபுகளும் எவருக்கும் கிடைத்துவிடப் போவதில்லை என்பது தெரிந்த விடயமே. ஜெனீவாப் பேச்சுவார்த்தையுடன் திருப்தி கொள்வதானது ஓர் தற்காலிகமானதாக இருக்க முடியுமே அன்றி அது முழுமையானதோ அன்றி நிரந்தரமானதோ அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்த போதிலும் அவை இடைநடுவில் நின்று போனமை நமக்குக் கிடைத்த மிகப் பெரிய அனுபவம்.

ஆக, பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடந்துள்ள மகிழ்ச்சியில் ஈழத் தமிழர்கள் பங்கு கொள்ளும் நிலையில் இல்லை என்பதை அரசியல்வாதிகளும் சர்வதேச சமூகமும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தின் துயரங்களை அனுபவித்து வருபவர்கள். அவர்களின் வாழ்விடங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் தமது வாழ்விடங்களை இழந்துள்ளதுடன் சொந்த ஊரில் உலாவித் திரிந்த அற்புதமான வாழ்வியலை -கூட்டுக் குடும்பக் கலாசாரத்தை- ஆலய வழிபாடுகளை- விழாக்களை -கல்வியை என எல்லாவற்றையுமே தொலைத்துவிட்டு முகவரிகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் வாடகை வீடுகளில் காலம் கழிக்கின்றனர். இதனால் அவர்களிடம் இருக்கக் கூடிய இறைமை, தனித்துவம் எல்லாமே போய்விட்டது.

அதிலும் காலம் நீண்டு செல்வதனால் புதிய சந்ததி தமது வாழ்விடங்களின் அற்புதம் பற்றியோ அன்றி விளை நிலத்தின் வீரியம் பற்றியோ எதுவும் தெரிந்து கொள்ளாமல், தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லாமல், சொந்த ஊர் சொல்ல முடியாதவர்களாக வாழும் நிலை துயரம் நிறைந்ததாகும்.

இவ்வாறு சொந்த முகவரியை இழந்துவிட்டு துயரத்தை நெஞ்சினில் சுமப்பவர்களுக்கு ஜெனீவாப் பேச்சுக் கொடுக்கக் கூடிய ஆறுதல்தான் என்ன?

# டென்மார்க்கிற்கு இலங்கை அரசு எதிர்ப்புத்தெரிவிக்க வேண்டும்!

## ஸ்ரீ.மு.கா. கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்களின் இறை தூதரின் முகமது நபியின் கேலிச் சித்திரம் தொடர்பாக டென்மார்க் நாட்டுக்கு அரசாங்கம் தனது உத்தியோகப்பூர்வ எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள டேனிஸ் தூதரகத்துக்கு அரசாங்கம் தனது எதிர்ப்பைத் தெரியப்படுத்த வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி வலியுறுத்தியுள்ளார்.

நீர்கொழும்பு மற்றும் திருகோணமலையில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர் டென்மார்க் நாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத் தப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டங்கள் திட்டமிட்டு நடத்தப்படுபவை அல்ல என்றும் ஆத்திரமடைந்திருக்கும் முஸ்லிம்களின் தன்னெழுச்சி யான போராட்டம் இவை என்றும் ஹசன் அலி தெரிவித்தார். (த)

## பழுதடைந்த பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தடை

### யூன் மாதம் முதல் அமுலுக்குவரும்

(கொழும்பு)

போக்குவரத்துக்கு ஒவ்வாத பஸ்களை சேவையில் ஈடு படுத்துவதற்குத் தடைவிதிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. இது தொடர்பான சட்டம் இயற்றுவது குறித்து மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது. எதிர்வரும் யூன் மாதம் இவ்வாறான பஸ்கள் சேவையில் ஈடுபடுவதை தடைசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இருக்கைகள் குறைந்த மற்றும் கரும்புகைக்கும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தடைவிதிக்கும் வகையில் சட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

சேவையிலிருந்து இடைநிறுத்தும் பஸ்களுக்கு பதிலாக புதிய பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்குபஸ் உரிமையாளர் களுக்கு அவகாசம் வழங்க மேல் மாகாண பிரயாணிகள் அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

இது குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள தாகவும் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதி காரசபை தெரிவித்துள்ளது. (க-9)

## கல்விசாரா ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க மறுப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் கல்விசாரா ஊழியர்களுக்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த காலத்திற்குரிய சம்பளம் வழங் கப்படமாட்டாது என பல்கலைக்கழக நிர்வாக சபை அறிவித்துள்ளது.

ஸ்தாபன கோவையின்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கமுடியாது என உபவேந்தர் திலக் கெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

வரவைப் பதிவுசெய்ய விரல் அடையாளத்தை இடும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தும் நடவடிக்கை உட்பட பல காரணங்களை முன்வைத்து கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த நடைமுறையை அடுத்த மாதத் திலிருந்து அமுல்படுத்து வதற்கு உறுதியளித்ததையடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. (க-9)

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை புலிகளின் பகுதிகளிலும் நடத்துக!

### அரச அதிபர்கள்வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று வடக்கு-கிழக்கு மாவட்டங்களின் அரச அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவு டனான ஆலோசனையின் போது இந்தக் கோரிக்கையை அரச அதிபர்கள் முன்வைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் தேர்தல் நடத்துவதை ஒத்திப்போடாமல் கூடுதல் பாதுகாப்புடன் உரிய ஏற்பாடுகளைச் செய்து தேர்தலை நடத்தலாம் என்று அரச அதிபர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலைப்போல் கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைத்தால் விடுதலைப்புலிகளின் பிர தேசங்களிலிருந்து நீண்ட தொலைவில் உள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கு மக்கள் வாக்களிக்க வரமாட்டார்கள் என்றும் ஆகையால் விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என் றும் அவர்கள் கூறியுள்ளனர். (த)

## ஏப்ரல் பேச்சுக்களுக்கு காத்திருக்கும் அதி உயர் பாதுகாப்பு வலயம்!

(கொழும்பு)

ஜெனீவாவில் ஏப்ரல் மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற உள்ள பேச்சுவார்த்தைகளில் அதி உயர் பாதுகாப்பு வலயம் பிரதான விடயமாக இருக்க கூடும் என்று தெரிகிறது.

முதல் சுற்றுப் பேச்சுக்களில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களைக் களைய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

4 ஆண்டுகளாகியும் செயற்படுத்தப்படாத இந்த சரத்தை ஏப்ரல் பேச்சுக்களுக்கு முன்னதாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வேத் தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்ற இலங்கையின் முயற்சியை ஜெனீவா பேச்சுக்களின் தொடக்கத்திலேயே விடுதலைப்புலிகள் முறியடித்துவிட்டனர்.

இந்த நிலையில் ஏப்ரல் பேச்சுக்களில் இயல்பு வாழ்க்கையை உருவாக்கும் வகையில், அதி உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்படும் என்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்தைச் செயற்படுத்த விடுதலைப் புலிகள் வலியுறுத்தக்கூடும் என்று தெரிகிறது.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனிதாபிமான நெருக்குவாரங்களைக் கருத்தில் கொண்டு அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அடுத்த சுற்றுப்பேச்சுக்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று கொழும்பு நாளேடான த சண்டே லீடருக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலும் விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# அரச அலுவலர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றுவதில்லையாம் -க.சிவரஞ்சன்

(காரைநகர்)

அரச அலுவலர்கள் எவரும் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றுவதில்லை என காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் க. சிவரஞ்சன் கவலை தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் வைபவம் அண்மையில் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்வைபவத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நிர்வாக உத்தியோகத்தர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில், ஊதியங்கள் வழங் கப்படாதநிலையில் எந்தவித எதிர்பார்ப்புமின்றி அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதனை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு பாராட்ட வேண்டும் எமதுபிரதேசத்தில். அறநெறிப்பாட சாலைகள் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெறுகின்றது. இது எமது சமயத்தையும் அறத்தினையும் வளர்க்கும் செயலாகும்.

அறநெறி ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களிற்கு அறநெறிகளைப் போதிக்கும் அதேநேரம் தமிழோடு இசை பாடும் பயிற்சியினையும் வழங்க வேண்டும். இதனூடாக இசையும் வளர்ச்சியடைவதோடு இவ்வாறு இசையுடன் பாடுவதனால் இலகுவில் மாணவர்கள் மனதில் பதியும் நிலையும் ஏற்படும்.

எமது சமயத்தையும் சம்பிரதாயங்களையும் சமயத் தொண்டுகளையும் மாணவர்களிற்குப் போதிக்கும் ஆசிரியர்கள் சேவைமனப்பான்மையுடன் செயற்படல் வேண்டும்.

இன்று ஊதியம் பெறும் அரச அலுவலர்களே நேர ஒழுங்குகளை கடைப்பிடிப்பதில்லை ஏனோ தானோ என்று கடமையாற்றுகின்றார்கள்.

இந் நிலையில் அறநெறி ஆசிரியர்களின் சேவை மகத்தானது எனப்பாராட்டி உரையாற்றியதுடன் அற நெறி அரசியர்களிற்கான ஒரு தொகுதி ஊக்குவிப்பு ஊதியத்தையும் வழங்கினார்.

இந் நிகழ்விற்கு காரைநகர் பிரதேச அறநெறி ஆசிரியர்கள் அறநெறிப் பாடசாலைகளின் ஒருங்கிணைப்பாளர் சோமசுந்தரக்குருக்கள் உட்பட சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-246)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இறைவனுடன் இணைந்து வாழும் போதுதான் அவனது கிருபை எல்லையற்றது என்பதை நாம் சரியாகப் புரிந்து கொள்கின்றோம். கடவுள் கிருபை அருளாளர்கள் வாழ்வில் ததும்பி விளையாடுகின்றது. இறைவன் கருணை வெள்ளமாக கருணைக்கடலாக விளங்குகின்றான். எனினும் உயிர்கள் அவனை நாடாமல் தாகத்தால் துடிக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேசம் விரைவில் அங்கீகரிக்கும்



## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

(ஜெனீவா)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச சமூகம் விரைவில் அங்கிகரிக்கும் என்று தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சுவிஸிலாந்தில் இடம் பெற்ற 'விடுதலையின் வாசல்' சிறப்பு எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவுக்கு சமாதானப் பேச்சுக்களுக்காக வந்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நாம் சர்வதேச சமூகத்திற்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். எமது போராட்டம் சிங்களச் சட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம். எமது போராட்டம்சிங்கள இனவாத அரசியல் அமைப்புக்கு எதிரான போராட்டம். இந்தச் சட்ட அரசியல் அமைப்பு அடக்கு முறைகளுக்கு எதிராகத்தான் விடுதலைப்புலிகளின் போராட்டங்கள் தோன்றின.

சர்வதேச சட்டப்படியும் சர்வதேச மனித உரிமைகளின் சாசனங்களின் படியுமே எமது போராட்டம் நகர்ந்து செல்கின்றது. ஆகவே ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் ஒரு முறை எமது தமிழர் தரப்பு நியாயங்களை உலகிற்குப் புரிய வைக்கும் சந்தர்ப்பமாக நாம் இதனைப் பார்க்கின்றோம்.

யுத்தநிறுத்த காலத்தில் கூட அரசு; தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வந்தனர். எமது தமிழர் தரப்பில் பல உயிர்கள் பறிக்கப்பட்டன. எமது மீனவர்கள் தமது தொழிலுக்கு செல்ல முடியாமல் படையினர் தடைகளை விதித்து அவர்களின் வாழ்வாதாரத்தினையே அழித்து வருகின்றனர்.

இந்த வகையில்தான் நாம் இருபது வருடங்களுக்கு மேலாக எமது போராட்டத்தினை நடத்தி வருகின்றோம். எமது மனித உரிமைகளை வென்றெடுக்கத்தான் பல்வேறு வழிகளில் முயன்று இன்று நாம் ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றோம்.

இன்று அடக்கு முறைக்காரர்கள் எங்களை சர்வதேசத்தின் முன்னால் பயங்கரவாதிகளாக காட்ட முனைகின்றார்கள். அமெரிக்க சுதந்திர விடுதலைப்போராட்டத்தில் அமெரிக்க மக்கள் ஆயுதம் தாங்கி போராடி பல இன்னல்களை அனுபவித்துத்தான் இந்த ஜனநாயகக் கட்டமைப்பினைக் கொண்டு வந்தனர்.

18 ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடித்தான் அங்கும் ஜனநாயகக் கட்டமைப்பினை நிறுவினர். அவற்றைப் போலவே இன்று தமிழர்களின் போராட்டமும் இடம்பெற்றுவருகின்றது.

எனவே சர்வதேச சமூகத்திற்கு உண்மை நிலைமைகள் புரிந்து தமிழர்களின் போராட்டத்தை ஆதரித்து , அங்கீகரிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என நடேசன் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## ஜனாதிபதியுடன் அரச குழு சந்திப்பு

ஜெனீவா நகரில் இரண்டு தினங்கள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்திவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய அரச குழுவினர் நேற்றையதினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தனர்.

இச் சந்திப்பில் பேச்சுகளின் போது மேற்கொள்ளப்பட்டவிவாதங்கள், உடன்படிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு அவர்கள் விளக்கம் அளித்தனர். (ச-4)



ஜனாதிபதியைச் சந்தித்தபின் அரச திணைக்களத்தில் அரச பிரதிநிதிகள் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது...

## உடன்படிக்கையில்...

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் இரண்டு தரப்பினாலும் எடுக்கப்பட்ட முடிபுகள் தற்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டதாகவே அர்த்தம் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் கருத்து மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாகவும் இது அரசுக்குழுவின் போலித்தனத்தை காட்டுவதாகவே அமைந்துள்ளது எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையினை இரு தரப்புமே ஏற்றுக்கொண்டு அதில் கூறப்பட்டுள்ள சரத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கான முதற் கட்ட நடவடிக்கையாகத்தான் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு வடக்குக் கிழக்கில் இருந்து ஆயுதக் குழுக்கள் அகற்றப்பட வேண்டும் என இணக்கம் காணப்பட்டது.

எமது தாயகப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற ஆட்கடத்தல் ,கொலைகள், வன்முறைகள் அனைத்திற்கும் முடிவு கட்டப்பட்டு ஒரு சுமுகமான நிலையினைக் கொண்டுவருவதற்கும் இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது.

இது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள அடிப்படை அம்சங்கள்தான் ஜெனீவாவில் பேசப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒப்பந்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கோ மாற்றியமைப்பதற்கோ எதுவித கருத்துக்களும் பரிமாறப்படவில்லை.

நோர்வேத் தரப்பிற்கு முன்னால்தான் இவை அனைத்தும் பேசப்பட்டன். இதனை இரு தரப்பும் மாற்றியமைக்க முடியாது. இவ்வாறிருக்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப்பட்டது என்பதை அரசாங்கம் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது.

இக்கருத்தினை ஜெனீவாவில் வைத்து நோர்வே அனுசரணையாளர்கள், சர்வதேச சமூகம் மற்றும் அனைத்து ஊடகவியலாளர்கள் முன்னிலையில் தெரிவித்திருக்கலாம். ஆனால் இதனை விட்டு கொழும்பில் ஊடகவியலாளர்களைக் கூட்டி இப்படியான உண்மைக்குப் புறம்பானதை தெரிவித்தமை அரசின் போலித்தன்மையை வெளிக்காட்டியுள்ளது என தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டினார். (ச-4)

## விடுதலைப்புலிகளின்...

தமது ஆரம்ப உரையையும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பேச் சுக்களையும் மேற்கொண்டுள்ளனர்.

2002 ஆம் ஆண்டின் யுத்த நிறுத்த உடன்படிக்கை சட்டவிரோத ஆவணம் என அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டினர்.

எனினும் இவ் யுத்தநிறுத்த உடன்படிக்கையினை பாதுகாப்பதினை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையின் இறுதியில் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந் நிலை அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள வெற்றிகளைக் குறைக்க காரணமாகவுள்ளது. அரசாங்கப் பிரதிநிதிகள் நோர்வேத்தரப்பினரதும் விடுதலைப்புலிகளினதும் அழுத்தங்களுக்கு குறிப்பிடத்தக்களவு பணிந்து போயுள்ளமை இதன் மூலம் புலனாகின்றது. இதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என கட்சியின் அரசியல் சபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சில்...

ஜெனீவாவில் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் வெளியான எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சீராக்கத்தை மேற்கொள்ளும் நடவடிக்கையாகும்.

ஏனெனில் அதில் சில புதிய விடங்கள் இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பார்த்தால் நாம் இதனை குறித்த வார்த்தைகளால் குறிப்பிடாவிட்டாலும் கூட அவை ஒட்டு மொத்தத்தில் முன்னர் ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களே என அமைச்சர் தெரிவித்தார்.

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் சமாதானத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியே. விடுதலைப்புலிகளுடன் இம் மாதம் 22,23 ஆம் திகதிகளில் நடைபெற்ற பேச்சுக்கள் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

இப் பேச்சுக்களின் வெற்றியும் அதன் விளைவுகளும் இந்நாட்டின் மக்களையே சாரும். இப் பேச்சுக்களில் யார் வென்றார்கள் என்பது குறித்து ஆராய இது ஒன்றும் கிரிக்கெட் போட்டியல்ல. இது எமது மக்களுக்கும் சமாதானத்திற்கும் கிடைத்த பெரு வெற்றி என்றார் அமைச்சர்.

இம் முறை சந்திப்பின் போது சில குறித்த விடயங்கள் மட்டுமே பேசப்பட்டதாகவும் இரு தரப்பும் எதிர்காலத்தில் வன்முறைகள் இடம் பெறுவதைத் தடுக்கும் பரஸ்பர உடன்பாடுகளை ஏற்றுக் கொண்டதாகவும் அமைச்சர் கூறினார்.

புலிகளால் அரச படையினருக்கு எதிராக தாக்குதல் எதுவும் இடம்பெறாது என்பதையும் துணைக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கும் உடன்பட்டிருப்பதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை இப் பேச்சுவார்த்தையின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கேற்ப அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பான அறிக்கை ஒன்றை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அடுத்தகட்ட பேச்சு வார்த்தையின் போது சமர்ப்பிக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## இலங்கையில்...

றால் முதலில் விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்க வேண்டுமென அக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ச-4)

## ஆயுதங்களை...

களைவதற்கு எவருக்கும் அதிகாரம் இல் லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தேவைகளைத்திருப்திப்படுத்துவதற்காக எங்களது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு எங்களது மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

எங்களுடைய மக்கள் ஜனநாயக நீரோட்டத்தில் மிக விரைவில் இணைவதை விடுதலைப்புலிகள் மதிக்கத்தவறினால் அரசியல் இராணுவ அமைப்பு என்ற வகையில் விடுதலைக்காக மக்களைத் தயார் படுத்த வேண்டியேற்படும் என றொய்ட்டர் பேட்டியில் கருணா தெரிவித்துள்ளார். (ச-4)

உடன் தேவை

01.ஒப்புநோக்குநர்கள் (ஆண்கள்- இரவுக் கடமை)

02.சிற்றூழியர்கள்-(தேநீர் தயாரிப்பாளர்கள் -ஆண்கள் இரவுக் கடமை)

யாழ்.நகர மையத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி
நிர்வாக உத்தியோகஸ்தர்







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 27.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.